"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி 2015

இல்போர்ட் பதியில் இனிதாய் எழுந்தருளும்
செல்வ விநாயகரைச் சேவித்தால் - வல்வினைகள்
நம்மைவிட்டு ஓடிவிடும் நன்மையெலாம் உண்டாகும்
தங்கும் அருட்செல்வந் தான்.



இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S

CATERING

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
| --- | --- | --- |
|  |  |  |

திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா

கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்

அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா

ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற

தரம் மிகு இலங்கை மற்றும்

தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180

mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 23

# கலசம்
# KALASAM

ஒலி 78

www.saivamunnettasangam.com

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

**வெளியீடு**
வை சிவனருட்செல்வர்

**விளம்பரம் தொடர்புகள்**
மா இந்துசேகரன்
சி தம்பு

**நிருவாகம்**
வ இ இராமநாதன்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

## கடவுள்களா? காட்சிப் பொருள்களா??

'தெய்வம் என்றால் அது தெய்வம்
அது சிலையென்றால் வெறும் சிலைதான்'
கவிஞர் கண்ணதாசன்

மகாபலிபுரத்திலே கடற்கரையிலே சிற்பிகள் இருந்து செதுக்குபவை சிலைகள். தம்முடைய காலுக்குக் கீழே வைத்து, உளியாற் செதுக்குவார்கள். அதே சிலைகளைக் கோயிலின் கருவறைக்குள் வைத்துக் கிரியைகள் செய்துவிட்டால் அவை தெய்வங்கள்; வெறும் சிலைகளன்று. அதுபோலக் கும்பகோணத்தில் பஞ்சலோகத்திலே செய்யப்படுபவை வெறும் சிலைகள். கோயிலிலே கொண்டுவந்து வைத்துவிட்டால் அவை உற்சவமூர்த்திகள்.

தற்போதெல்லாம் கோயில் உற்சவங்களுக்குப் போனால், அங்கே வழிபட இயலாது. பாதிப்பேர், எழுந்தருளும் கடவுளைத் தரிசிப்பதை விடுத்துத் தத்தம் கைத்தொலை பேசிகளிலே படங்கள் எடுத்தவண்ணம், நந்தனாருக்கு முன்னேயிருந்த நந்திபோலக் குறுக்கே நிற்பார்கள். வேடிக்கை என்னவென்றால், கடவுளை வணங்குவதைவிட; அந்தக் காட்சியைக் கண்டுகளிப்பதை விட; படம் எடுப்பதிலேயே அவர்கள் கவனம் முழுவதும் இருக்கும். அந்தக் காலத்திலே படம்பிடிக்கும் கருவிகள் இல்லை. அதனால் அவர்கள் படம் பிடிக்கவில்லை, இந்தக்காலம் அப்படியில்லையே என்று அவர்கள் சொன்னால் அது ஏற்றுக்கொள்ள முடியாத வாதம்.

திருமணம், புதுமனை புகுவிழா, புத்தக வெளியீட்டு விழா, பாராட்டு விழா என்பவை பதிவு செய்யவேண்டிய விழாக்கள். அவற்றை, அங்கு வந்துள்ள பார்வையாளருக்குப் பாதிப்பு ஏற்படாதவகையிலே படம்பிடிப்பதில் எவ்விதத் தவறும் இல்லை. அது அவசியமானதுங்கூட. ஆனால் இறைசம்பந்தமான ஆன்மிக விழாக்களை ஏன் படம்பிடிக்கவேண்டும் என்பது புதிராகவுள்ளது.

பல முற்போக்காளர்கள் கிறித்துவ, இசுலாமிய மதங்களை உதாரணங் காட்டி, காலத்துக்கேற்ப நம் சைவசமயம் மாறவேண்டும், மாறாவிட்டால் அழிந்துவிடும் என்று பல வாதங்களை முன்வைப்பார்கள். ஆனால் அவர்கள் உதாரணமாகக்கூறும் மதங்களுக்குரிய தேவாலயத்தினுள்ளோ அல்லது பள்ளிவாசலுள்ளோ யாராவது படம் எடுக்கிறார்களா என்று தெரியவில்லை. எடுக்க அநுமதி கொடுப்பார்களா என்றும் தெரியவில்லை.

ஒரு விளையாட்டு நிகழ்வு அல்லது ஓர் இசை நிகழ்ச்சி நடக்கும்போது அதை நேரிலே சென்று பார்ப்பது, கேட்பது ஒருவகையான அநுபவம். அதை ஒளிப்பதிவிலே பார்ப்பதில் அந்தச் 'சுகம்' வராது. அதைவிட மேலான ஆன்மிகத்தில், இறைவனைக் கோயிலிலே நேரேபோய் வழிபடுவதுபோல, படங்களிலே வழிபடுவதில் அந்தச் 'சுகம்' வருமா என்பது தெரியவில்லை. கடவுளின் அழகைக் கண்களாற் கண்டு கருத்திலே இருத்துவதேயன்றி நம் 'கமரா'க்களில் அன்று. விக்கிரகங்களைத் தவிர்த்து, அங்கு வந்துள்ள மக்களைப் படம்பிடிப்பதிலே தவறு இல்லை. **கோயில்களிலே உள்ள சைவக்கடவுளர் திருவுருவங்கள் வழிபாட்டுக்குரிய தெய்வச் சிலைகளே அன்றி வீட்டிலும் சட்டைப்பையிலும் படம்பிடித்து வைத்துக் கொண்டுதிரியும் காட்சிப் பொருள்கள் அன்று.** சைவர்கள் இதை உணரவேண்டும்.

க ஜெகதீஸ்வரன்
ஆசிரியர்

# இந்த இதழில்


| | |
|---|---|
| வினையகற்றும் விநாயகன் | 03 |
| அவனருளாலே அவன்தாள் வணங்கி | 04 |
| மஹாராஷ்டிரா - மும்பாதேவி கோயில் பயணக்கட்டுரை | 07 |
| கம்போடியாவில் காட்சிப் பொருள்களாகும் ஆலயங்கள் | 12 |
| எம் சமையம் | 17 |
| சாக்கியர் நாயனார் | 19 |
| ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட தினங்கள் | 29 |
| யாரும் காணலாம் | 30 |
| திருமுறையிலே....... | 36 |
| இவர்களை என்னவென்று சொல்வது? | 37 |
| கண்ணனும் தாத்தாவும் | 38 |
| Hinduism in search of Answers | 43 |


**அட்டைப்படம்: செல்வவிநாயகர் தேர் - இல்போர்ட்**

**படம்: பாமினி சாந்தன்**

# வினையகற்றும் விநாயகன்

இலகுவாய் வழிபடுவதற்கு ஒரு கடவுள் விநாயகர். ஆலமரத்தின் அடியிலும், ஆற்றங் கரைகளிலும், தெருச்சந்திகளிலும் இருந்து அருள்பாலிப்பவர் இவர். அர்ச்சனை செய்வதற்கும் நம்மிடம் இருப்பவைகளைக்கொண்டே, அரிசி, வெல்லம், அறுகு போன்ற பொருள்களைக் கொண்டே, அர்ச்சித்து வழிபடலாம். பொன்னோ, விலையுயர்ந்த பொருள்களோ தேவையில்லை. அதுதான் விநாயகரின் சிறப்பு.

விநாயகர் ஒரு திருக்கரத்திலே தாம் உண்பதற்கு மோதகத்தை வைத்திருக்கிறார். இன்னொரு திருக்கரத்திலே மருப்பு (தந்தத்தை ஒடித்து) வைத்திருக்கிறார். தேவர்களைக் காப்பதற்காக அதை வைத்திருக்கிறார். நான்ற கையான துதிக்கையிலே கலசம் வைத்திருக்கிறார். தன் பெற்றோரான சிவனுக்கும் உமைக்கும் பாதபூசை செய்வதற்கே அந்தக் கலசம். ஆனால் மற்றைய இரு திருக்கரங்களிலும் பாசம், அங்குசம் என்கின்ற, யானையை அடக்கப் பயன்படுத்தும், இரு பொருள்களை வைத்திருக்கிறார். யானையை அடக்கும் கருவிகள் விநாயகருக்கு ஏன்?

அந்த யானை வேறெதுவும் அன்று. நம்முடைய ஆணவமலமே அது. அதுவும் சாதாரண யானை அன்று. மதம் கொண்ட யானை. கண்ணில் கோபக்கனல் தெறிக்க, அழிக்கவென்றே புறப்பட்ட யானை. அப்படியான, கொடுமையை விளைவிக்கவென்று, புறப்பட்ட யானையை அடக்கவே அந்தப் பாசமும் அங்குசமும் தரித்தவராக விநாயகர் இருக்கிறார். யானையை அதன் பாகன் அடக்குவதுபோல நம்முடைய ஆணவம் என்கின்ற மதயானையை அந்த விநாயகர் அடக்குகிறார். அதற்கென்றுதான் தன் இரு திருக்கரங்களிலும் பாசமும் அங்குசமும் தரித்தவராகக் காட்சி தருகிறார்.

'தனக்கு ஒரு திருக்கை, தேவர்களுக்கு ஒரு திருக்கை, பெற்றோருக்கு ஒரு திருக்கையென மற்றெல்லோருக்கும் ஒவ்வொரு திருக்கையை மட்டும் வைத்துக்கொண்டு, எளியவனான எனக்குமட்டும் இரு திருக்கைகளை ஒதுக்கிவைத்திருக்கிறார் விநாயகர் என்றால் அவர்தம் கருணையை என்னவென்பது? என்பால் அவர்க்கிருக்கும் கரிசனையை அளவிட முடியுமா?' என்கிறார் ஒரு புலவர்.

**பண்ணியம் ஏந்துங் கரந்தனக் காக்கிப் பாநிலா மருப்பமர் திருக்கை**
**விண்ணவர்க் காக்கி யரதனக் கலச வியன்கரந் தந்தைதாய்க் காக்கிக்**
**கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக் கரிசினேற் கிருகையு மாக்கும்**
**அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபத் சகாயனை அகந்தழீஇக் களிப்பாம்**

பண்ணியம் - மோதகம், மருப்பு - தந்தம், கலசம் - நிறைகுடம்

தணிகைப்புராணத்தில் வரும் இச்செய்யுளில் விநாயகரின் கருணையை விதந்துரைக்கிறார் அந்தப் புலவர். அந்த ஆபத்சகாய விநாயகரை நாம் திருத்தணி முருகன் கோயிலிலே தரிசிக்கலாம்.


இந்தக் கலசம் இதழ் வெளிவரும்போது இல்போர்ட் என்ற இடத்தில் இருந்து அருள்பாலிக்கும் செல்வவிநாயகர் தேர்ப்பவனி வருவது நம்மையெலாம் காத்து, நம் வினைகளை நீக்கவே. அவர் அடிபணிந்து அநுபூதியைப் பெறுவோம்.

# 'அவனருளாலே அவன்தாள் வணங்ங்கி'

- அநுஜா

இந்தக் கட்டுரையின் தலைப்பிலே "வணங்ங்கி" என்று இருக்கிறதே! தலைப்பிலே உள்ள இந்த எழுத்துப் பிழையையே ஆசிரியர் கவனிக்கவில்லையா? என்று நினைப்பவர்களுக்கு:

**சிவபுராணத்திலே முதல் வரி 'நமச்சிவாய வாஅழ்க, நாதன்தாள் வாழ்க' என்று வரும். அந்த முதலாவது வாழ்க என்ற சீரில் ஓர் 'அ' மிகுந்து வாஅழ்க என்று இருப்பதைக் காணலாம். இதை அளபெடை எனச் சொல்வர். இங்கே 'அ' உயிரெழுத்து என்பதால், அது உயிரளபெடை ஆகும். அதுபோல 'அவனரு ளாலே அவன்தாள் வணங்ங்கி' என்பதில் 'ங்' இரண்டுமுறை வருகிறது. இது ஒற்றளபெடை. மெய்யெழுத்தை ஒற்றெழுத்து என்றும் சொல்வர். பாட்டுக்களிலே ஓசைக்காக இப்படி அளபெடைகள் வருவதுண்டு. அளபெடை கற்பிக்கும் இலக்கண ஆசிரியர்களும் இந்தச் சிவபுராண வரிகளை உதாரணமாகக் காட்டுவது வழக்கம். மணிவாசகரின் திருவாசகத்தைத் திருத்த நாம் யார்?**





**'அவனன்றி ஓரணுவும் அசையாது'** என்பது ஆன்றோர் வாக்கு. இந்தப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் இறைவனே அதன் ஒவ்வொரு அசைவுக்கும் ஆதாரமாக இருக்கிறான். மனிதர்கள் பல சாதனைகளைப் புரிந்து பெருமைப்பட்டுக்கொள்ளுகிறார்கள். இறைவனே தன்னைச் செயற்பட வைக்கிறார் என்பதை நினைப்பவர்கள் மிகக் குறைவு. இறையருளால் இதனைச் செய்யமுடிந்ததே என்று எண்ணுபவர்களே உலகில் உண்மை எது என்று உணர்ந்தவர்கள் ஆவர். மணிவாசகர் இறைவனை உணரவும், அவரை வணங்குவதற்கும் கூட அவனருள் வேண்டும் என்பதை அறிந்தே, 'அவனருளாலே அவன்தாள் வணங்ங்கி' என்று சிவபுராணத்திலே குறிப்பிடுகிறார். 'சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்' என இதற்கு முதலுள்ள வரி அமைந்துள்ளது. சிவன் என் மனத்தில் இருந்ததனாலேதான், நான் அவனை வணங்க முடிகிறது என்று மணிவாசகர் கூறுவதை நாம் அவதானிக்கலாம்.

அடியார்களின் வரலாற்றை உற்று நோக்கும் போது மணிவாசகரின் கூற்று எவ்வளவு உண்மையாது; பொருத்தமானது என்பதை நாம் உணரமுடிகிறது. இறையருளின் துணையாலேதான் நாயன்மார்கள், ஆழ்வார்கள், பெருமகான்கள் எத்தனையோ அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள். அவைகள் மக்களை இறைவனிடம் வழிப்படுத்தத் துணைநிற்கின்றன.

முதலாவதாகத் திருஞானசம்பந்தரின் வரலாற்றைப் பார்ப்போம். மூன்று வயதுக் குழந்தையான சம்பந்தர் நீராடச் சென்ற தந்தை நீரில் அமிழ்ந்தபோது, அவரைக் காணாது பயந்து 'அம்மையே அப்பா' என்று அழுதார். அந்த அழுகைக்குரலைக் கேட்ட இறைவன் (இறைவன் எங்கும், எதிலும் இருக்கிறார்) உமையம்மையுடன் காட்சியளிக்கிறார். உமா தேவியார் குழந்தைக்குப் பொற்கிண்ணத்தில் பாலூட்டுகிறார். அம்மையப்பனாகத் தோன்றித் தன்னை ஆட்கொண்ட காட்சியை, 'தோடுடைய செவியன்' என்று ஆரம்பிக்குந் தேவாரத்தில் அழகுற வடிக்கிறார் திருஞானசம்பந்தர்.

குழந்தையின் வாயிலே பால் வடிவதைக் கண்டு, 'யார் பால் கொடுத்தது?' என்ற தந்தையின் கேள்விக்குப் பதிலாக அமைகிறது இந்தத் தேவாரம். அன்றிலிருந்து இந்த ஞானப்பாலுண்டு ஞானம் பெற்ற குழந்தை பல அற்புதங்களைச் செய்து பத்திச் சுவையும் தமிழ்ச் சுவையும் ததும்பும் பலநூறு தேவாரங்களைப் பாடியருளியது.

அடுத்து, திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றைப் பார்ப்போம். சைவராக வளர்ந்துகொண்டிருந்த மருணீக்கியார் சமண முனிவர்களின் போதனைகளைக் கேட்டுச் சமணராகி, அம்மதத்தைப் பின்பற்றுகிறார். சிவபத்தையான அவரின் தமக்கையார் திலகவதியார் இதனைக் கண்டு மனம் வருந்தி, தன் தம்பியைச் சைவனாக்கும்படி இறைவனிடம் மன்றாடி முறையிட்டார். பத்தர்களின் குறைகளைத் தீர்க்கவல்ல இறைவன், மருணீக்கியாருக்கு சூலைநோய் வரும்படி செய்கிறார். நோயால் மருணீக்கியார் துடிதுடிக்கிறார். சமணரின் வைத்தியம் எதுவும் பயனளிக்கவில்லை. தாயாகித் தன்னை வளர்த்த தமக்கையிடம் ஓடிவருகிறார் தம்பி. அவரைத் திருநீறு அணிவித்து, திருவதிகை வீரட்டானத்துக் கோயிலுக்கு அழைத்துச் சென்றார் திலகவதியார். அங்கு வீற்றிருக்கும் இறைவனைப் பணிந்து மனமுருகித் தனக்கு ஏற்பட்டுள்ள சூலைநோயைத் தீர்க்கும்படி வேண்டி, 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்று ஆரம்பிக்கும் தேவாரத்தைப் பாடுகிறார். என்னாற் தாங்கமுடியவில்லையே, என்னைக் காப்பாற்றுங்கள் என்னுங் கருத்தில்,

**'ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில,**
**வீரட்டானத்துறை அம்மானே'**

என்று சரணாகதி அடைகிறார். பத்தனின் குரலைக்கேட்டுப் பரமன் இரங்கி, அவருடைய சூலைநோயைத் தீர்க்கிறார். அன்றுதொட்டு இறைவனிடம் அன்பகலா மனத்துடன் இறைவனைப் போற்றிப் பாடுவதிலும், உழவாரத் தொண்டு செய்வதிலும் தன் வாழ்வை அர்ப்பணித்தார். சமணர்கள், இவர் சைவராகியதைக் கண்டு பலவித துன்பங்கள் செய்தபோதும் (சுண்ணாம்பு அறையில் இட்டும், யானையை ஏவி மிதிக்கச் செய்தும், கல்லுடன் கட்டிக் கடலில் எறிந்தும்) அவையாவும் இறையருளிலே திளைத்திருந்த இவரைக் கண்டு விலகிச்சென்றன. இவருடைய தேவாரங்களின் இனிமையைக் கேட்டு மகிழ்ந்த இறைவன் இவருக்கு நாவுக்கரசர் என்ற பட்டத்தை வழங்கினார்.

சுந்தரரை ஒரு விசித்திரமான வகையில் இறைவன் ஆட்கொள்கிறார். மணக்கோலத்தில், திருமண மண்டபத்தில் இருக்கும் நம்பியாரூரரைப் பார்த்து, 'நீ என் அடிமை' என்று வாதாடுகிறார் கிழப் பிராமண வடிவில் இருந்த இறைவன். 'பித்தனே! நான் எப்படி உனக்கு அடிமையாவேன்?' என்று எதிர்வாதிடுகிறார் நம்பியாரூரர். 'பித்தனே' என்று தன்னைத் திட்டியவருக்கு தான் யாரென்று இறைவன் உணர்த்திய பின்பு, 'பித்தா' என்றே பாடென்று அடியெடுத்துக் கொடுத்துப் பாடவைக்கிறார் சிவபெருமான்.

**பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா**
**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்**
**அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே**

என்று பத்திபொங்க அவரின் அருட்திறத்தையும் அழகிய தோற்றத்தையும் கண்டுகளித்த சுந்தரர், என்றைக்கும் மறவாது என்மனத்தில் உன்னை நிலைக்கச் செய்தாய் என இறைவன் தன்னை வந்து ஆட்கொண்ட கருணையை எண்ணிப் பெருமிதம் அடைகிறார்.

இறைவன் தானாகவே வந்து அடியார்களை ஆட்கொண்டு தன்னைப் பாடும்படி பணிக்கிறார். இதன்மூலம் நாமும் இறைவனின் கருணையையும் பெருமையையும் அறிய முடிகிறது.

'தவமும் தவமுடையார்க் காகும்' என்பதைப் போல, மணிவாசகரை ஆட்கொள்ளவென்றே திருப்பெருந்துறையில், குருந்த மரத்தடியில் குரு வடிவினராகக் காத்திருக்கிறார் சிவபெருமான். தன்னுடைய அரசனின் ஆணைப்படி குதிரைகள் வாங்கச் சென்று கொண்டிருந்த வாதவூரர் குருந்தமரத்தின் கீழ்ச்

சீடர்கள் சூழ இருக்கும் சிவனடியாரைக் கண்டார். கண்டதுமே ஒரு குழந்தை தாயைக் கண்டதும் ஓடுவதுபோல ஓடோடிச் சென்று அவருடைய பாதங்களில் வீழ்ந்து தன்னை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறார். இறைவ னுடைய அருட்பார்வை பட்டதுமே மணிவாசகர் தான் யார், தான் எதற்காக அந்த ஊருக்கு வந்தோம் என எல்லாவற்றையும் மறந்தார். தான் குதிரைகள் வாங்கக் கொண்டுவந்த பொன்னையும் பொருளையும் -சிவனடியாரின் காலடியில் வைத்துவிட்டு அங்கேயே தங்கிவிட்டார். அரசன் தன் கட்டளையை மீறிய வாதவூரரைப் பலவாறாகத் தண்டித்தான். ஒவ்வொரு முறையும் தண்டனைக்குள்ளான போது வாதவூரர் இறைவனையே வேண்டுவார். இறுதியில் அரசனே மணிவாசகரின் பெருமையை உணர்ந்தான். நாட்டு மக்களும் இறையருளின் பெருமையை உணர்ந்தனர்.

மணிவாசகர் பல நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடி இறைவனைப் போற்றினார். இவருடைய அற்புதமான பாடல்களின் அருமை பெருமை அளவிடற்கரியன. இதனால் இவருடைய பாடல்களின் தொகுப்புத் திருவாசகம் என அழைக்கப்படுகின்றது. திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத் துக்கும் உருகார் என்பதற்கிணங்க திருவாசகம் பாடுவோரையும் கேட்போரையும் உருக வைக்கும் தன்மை உடையதாகும்.

சந்தச் சுவை மிகுந்த திருப்புகழைப் பாடியவர் அருணகிரிநாதர். இவர் தான் வாழ்ந்த கேவலமான வாழ்க்கையை எண்ணி மனம் நொந்து, கோபுரத்திலிருந்து குதித்துத் தன் உயிரை மாய்க்கத் துணிந்தவேளை, முருகன் அவரைத் தடுத்தாட்கொண்டான். முருகனின் அருள்பெற்ற அருணகிரியார், அவன் அழகைக் கண்டு, அவனின் அருளமுதைச் சுவைத்து, 'முத்தைத்தரு பத்தித்திருநகை' என்ற திருப்புகழைப் பாடினார். தொடர்ந்து பல முருகன் கோயில்களுக்குஞ் சென்று பலநூறு திருப்புகழ்களைப் பாடியருளினார். 'திருப் புகழைப் பாடப் பாட வாய் மணக்கும்' என்று நம்மைப் பாடவைத்தவர் அருணகிரியார்.

கண்ணப்பர் வரலாறு மிக அதிசயிக்கத்தக்க ஒன்றாகும். காட்டில் வேடுவ குலத்திலே பிறந்து திண்ணனார் என்னும் பெயருடன் அவர் வளர்கிறார். திருக்காளத்தி மலையில் வீற்றிருக்கும் இறைவன் இவரை ஆட்கொள்ளத் திருவுள்ளம் கொண்டார். வேட்டையாட அம்மலைப்பக்கம் தன் நண்பர்களுடன் செல்கிறார் திண்ணனார். மலையில் ஏற, ஏற அவருடைய மனத்தில் இனம்புரியாத உணர்வுகள் உடலைப் புல்லரிக்கச்செய்தன. மலையின் உச்சியில் சிவலிங்க உருபமாக இறைவன் அமர்ந்திருக்கிறார். அவரைக் கண்டதும், திண்ணனார் தன்னை அறியாமல் பணிந்து ஏற்றுகிறார். அங்கே முன்பு யாரோ பூசை செய்திருப்பதைக் காண்கிறார். தனக்குத் தெரிந்த வகையில் பூசை செய்து தான் உண்ணும் மாமிசத்தைப் படைத்து மகிழ்கிறார். சிவன் இவருடைய பத்தியின் மேன்மையை, சிவாசாரியர் சிவகோசரியாருக்கும் உலகத் தவருக்கும் தெரிவிக்கும் வகையில், தனது கண்ணிலிருந்து இரத்தம் வடியச் செய்கிறார். திண்ணனார் தன் கண்ணை இடந்து வைக்கிறார். அடுத்த நாள் மறுகண்ணில் இரத்தம் வடியவைக்கிறார் இறைவன். அதைப் பார்த்து முதலிலே பதைபதைத்த திண்ணனார், தனக்கு இன்னொருகண் இருக்கிறதே என்ற களிப்பில், அந்தக் கண்ணையும் இறைவனுக்குக் கொடுக்கத் தீர்மானிக்கிறார். இறைவன் அவரைத் தடுத்தாட்கொள்கிறார். இவ்வாறாக இறைவன் நாயன்மார்களின் வரலாற்றில் மட்டுமன்றி, இறைபணி செய்த மகான்கள், அடியார்கள் வாழ்விலும் பல திரு விளையாடல்களைச் செய்திருப்பதைக் காணலாம். அவனருளால், அடியார்கள் எவ்வளவோ அற்புதங்களைச் செய்திருக் கிறார்கள்; அமுதம் போன்ற தேவார திருவாசகங்களை, திருப்பாசுரங்களைப் பாடியுள்ளார்கள். இவற்றை நாமும் பத்தியுடன் பாடி இறைவனைப் பணிந்தேத்தினால் அவர்களைப்போல இறையருளை அநுபவித்து உணரலாம். மனிதப் பிறவியின் பயனை அடையலாம்.

# மஹாராஷ்டிரம்

- பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க. கதிர்காமநாதன்

## மும்பாதேவி கோயில்

பம்பாய் என்ற பெயர் மும்பாய் என மாறியதற்குக் காரணம் மும்பாதேவிதான். வடமொழிச் சொல்லான மகா அம்பா, 'மும்பா' வோடு 'ஆய்' என்ற மராத்தி வார்த்தையும் சேர்ந்து,

மும்பா + ஆய் = மும்பாய்

ஆகியது. சக்தியின் ஒரு தோற்றமான மும்பாவிற்குக் கட்டிய மும்பாதேவி கோயில் மிகப் பழைமையான கோயில் ஆகும். 1675 இல் இக்கோயில் நிருமாணிக்கப்பட்டது. தேவியின் பெயரே நகரத்தின் பெயரும் என்பதனால் யாவரும், வருவோரும் போவோரும் இன, மத பேதமின்றி முண்டியடித்துக்கொண்டு ஆவலாகப் படையெடுத்து இந்தக் கோயிலைப் பார்க்க; தரிசிக்கச் செல்வர்.

**தலவரலாறு:**

ஒரு காலத்தில் மும்பரகா என்ற இராட்சதன் அடிக்கடி சென்று மக்களைத் துன்புறுத்தி, கொள்ளையடித்து வந்தான். இவன் மற்றோரைப் பலவகையாலும் இம்சைப்படுத்தி இன்பமடையும் தன்மையுள்ளவன். பீதியடைந்த மக்கள் பிரம்ம கடவுளிடம் தங்களைக் காக்கும்படி வேண்டினர். சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா, தன் உடலிலிருந்து எட்டுக் கைகள் கொண்ட காளியைத் தோற்றுவித்தார். காளி வீறுகொண்டு மும்பரகாவை அடக்கினாள். அவன் முழந்தாளில் மண்டியிட்டு, தனது பெயராலும் தேவியின் பெயராலும் கோயில் அமைக்கும்படி வேண்டினான். இதனால் மும்பா + தேவி = மும்பாதேவி கோயில் என்றாயிற்று.



பதினைந்தாம் நூற்றாண்டில் உப்பள வேலைசெய்வோரும், மீன்பிடித் தொழில் செய்வோரும் புராதன ஏழு பம்பாய் தீவில் வசித்தனர். இவர்களாலேதான் கோயில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பல அழிவுகளுக்குப்பின் இக் கோயில் மும்பையின் தெற்குப் பகுதியில் கடற்கரைக்குச் சமீபமாக இருக்கின்றது.

**பயணம்:**

பிள்ளையார் கோயிலை வணங்கிவிட்டு வெளியே வந்தோம். சாரதியையும் காரையும் காணவில்லை. எம்மிடம் நல்லவேளை அவரின் கைத்தொலைபேசி எண் இருந்தது. ஆனால் எம்மிடம் தொலைபேசி ஒன்றும் இல்லை. தடுமாறி மிக அவதிப்பட்டோம். மனிதநேயம் பாருங்கள்! ஆங்கிலம் தெரிந்த தம்பதியர் எம்மை விசாரித்து, மராத்தி மொழியிலே பேசி, சாரதியை வரவழைத்தனர். பின்னர் மும்பாதேவி கோயிலுக்குப் பயணமானோம்.

சந்து பொந்துகளைக் கடந்து, கார் நின்று நின்று சென்றது. கோயில் ஏனைய கோயில்கள் போன்று தோன்றவில்லை. கோயிலின் தோற்றமும் சுற்றாடலுந்தான் அதற்குக் காரணமாகும். இம்முறை கார் நின்ற இடத்தை நன்றாகக் கவனித்துச் சென்றோம். கோயில் வாசலில் திறந்திருந்த கடை மூன்றடி அகலமும் ஐந்து அடி நீளமுந்தான் இருக்கும். அங்கே அருச்சனைப் பொருள்களை மூன்றுபேர் விற்றுக்கொண்டு இருந்தனர். ஒரே சனக் கூட்டம். யாவரும் அவர்களிடையே மாறி மாறிப் பொருள்களை வாங்கிக்கொண்டிருந்தனர். மூவரும் சளைக்காமல் கொடுத்துக்கொண்டே இருந்தனர். அந்த நெரிசலில் உள்ளே புகமுடியாத நாம், இதை ஆச்சரியத்தோடு விதந்து பாரத்துக்கொண்டிருந்தோம்.

ஒருவாறு உள்ளே சென்றோம். இங்கு பிள்ளையார் கோயிலில் இருந்ததைவிடச் சனநெரிசல் அதிகம். பிள்ளையார் கோயிலைவிட இது சிறு கோயில் என்ற காரணமோ தெரியாது.

மூன்றடி உயரமுள்ள மும்பாதேவி, நின்ற நிலையில், பொத்தான் போன்ற மூக்குத்தி அணிந்து சிவப்பு நிறத்தில் இருந்து அருள்பாலிக்கின்றார். மானசிகமாக வணங்குவோருக்கு மும்பாதேவித் தாயார் தம்முடைய விருப்பத்தைப் பூரத்தி செய்வாள் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டு. ஒருவரும் கோரிக்கை நிறைவேறாவிடின் மனம் வருந்துவதில்லை. மும்பாதேவியைப் பூமாதேவி எனவும் கருதுகின்றனர்.

இக்கோயிலைத் திங்கள் தவிர ஏனைய நாள்களில் வழிபடலாம். ஆரத்தியும் உண்டு. பிரவேசக் கட்டணம் இல்லாமல் யாவரும் செல்லலாம். படங்கூட எடுக்கலாம். இக்கோயிலில் பிள்ளையார் அநுமன் தரிசனமும் உண்டு.

கோயிலை ஓட்டோ, கார் மூலமாகவோ வாடகைக் கார் மூலமாகவோ அடையலாம். ரயில் சேவை அடிக்கடி உண்டு. அண்மித்த ரயில் நிலையம் Charns road நிலையம் ஆகும்.

கெட்ட தனயன் உண்டு. கெட்ட தாய் (மாதா) உண்டா?
'உபாத்யானம் தசம் ஆச்சார்ய, ஆச்சார்யானாம் ஸதம் பிதா, ஸ்கஸ்ரந்து பிதரம் மாதா கௌரவேண த்ருச்யதே'

- மநுநீதி

சிவாசாரியர்கள் ஆசிரியர்களைவிடப் பத்துமடங்கும், தந்தை ஆசாரியார்களைவிட நூறு மடங்கும், தாயானவர் பிதாவைக் காட்டிலும் ஆயிரம் மடங்கும் உயர்வாக மதித்துப் போற்றி வழிபடத் தக்கவர்.
போற்றி வழிபடத் தகுந்தவள் மாதா, தாய் - சத்தி

'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை'

***சத்திரபதி சிவாஜி மகராஜ் சிலை:***

கோயிலுக்குச் சமீபத்தில், கடற்கரைக்குச் சற்று எதிராக, குதிரைமீது இம்மன்னன் கம்பீரமாகச் சவாரி செய்வதுபோன்ற சிலை இருக்கிறது. மும்பையில் வேறு எதைப் பார்க்காவிட்டாலும் இந்தச் சிலையைக் கட்டாயம் பார்க்கவேண்டும். பத்தியும் பரந்தமனமும் நல்லொழுக்கமும் கொண்ட இவ்வரசனை மகாராஷ்டிர மக்கள் தெய்வமாகவே கருதுகின்றனர். இவரின் சிலைகள் இல்லாத இடம் இல்லை. இந்தியா இம்மன்னனைப் பாராட்டி முத்திரையும் வெளியிட்டது. மும்பாய் விமான நிலையத்துக்கும் முன்பிருந்த பெயரை மாற்றி



இவருடைய பெயரையே வைத்திருக்கிறார்கள். இந்தியக் கடற்படையும் இவர் பெயரைத் தாங்கியுள்ளது. சிவாஜியின் சிலை இப்போதும் என் கண்முன் பசுமையாய் நிற்கிறது.

**சத்தி வழிபாடு:**

'சத்தியே இல்லாமற் சிவனேயென்று இருக்கிறேன் என்று சொல்வதுண்டு. சிந்து வெளி அகழ்வுகளில் 5500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் தாய்க்கடவுள் உருவங்கள் பதித்த களிமண் வில்லைகள் நூற்றுக் கணக்கிலும் சிவ உருவங்கள் பதித்த வில்லைகள் மூன்று, நாலே இருக்கக் காணப்பட்டன. இதிலிருந்து சிவனைக் காட்டிலும் தாய்க் கடவுளே அங்கே பிரபலமாக இருந்த தெய்வம் என்பது பெறப்படுகின்றது.'

- வைத்திய கலாநிதி சிவ தியாகராஜா

**ஆதிபராசத்தி:**

எல்லாச் சத்திகளின் உறைவிடம் ஆதிபராசத்தியாகும். ஆதி = முன்தோன்றிய, பரா = பரப்பிரம்மம் = மிக உயர்வானவர், சத்தி = பலம், உண்மை, அதிகாரம். முதலிலே தோன்றிய அவளே உலகத்தைத் தோற்றுவித்ததாகவும் காப்பாற்றுவதாகவும் அழிக்க வல்லமை கொண்டவளாகவும் உள்ளவள் எனத் தேவி புராணம் கூறுகிறது. எமது முள்ளந்தண்டின் அடிப்பகுதில் உறங்கும் குண்டலினியின் சத்தியும் இவளே. உருவமில்லாத இவள் அழகிய உருபிணியாக, பார்வதியாக சிவனின் சத்தியாக உருவமுள்ளவள் ஆகிறாள். ஆதிபராசத்தி (அம்பிகை) யின் தோற்றங்கள்:



**1. துர்க்கை:**

துன்பத்தைப்போக்குபவள் துர்க்கை. துர்க்கம் என்றால் பெரிய அகழி. துன்பப்படுகுழியிலிருந்து கரை யேற்றுபவள் இவளே. நெருப்புப் போன்ற நிறமுடைய இவளைக் கொற்றவை என்றும் கூறுவர். பாலைவனமாகிய 'பாலை' நிலத்தில் வசிப்போர் துர்க்கை வழிபாடு செய்வர். வீரர்கள் கொற்றவையை வணங்கிப் பலி கொடுத்துப் போருக்குச் செல்வர். வீரபாண்டிய கட்டபொம்மன் ஜக்கம்மாவை கொற்றவையாக வழிபட்டது குறிப்பிடத்தக்கது.

சித்தர்களுக்குத் தலைவியாகவும் பசி, தாகம், சோம்பல், பொறுமை, பிரேமை, ஞானம், தனம், எண்ணம், மகிழ்ச்சி, வீரம் முதலியவற்றுக்கு அதிதேவதையாகவும் உள்ளவள் இவளே! துர்க்கையிலிருந்து கங்காதேவி தோன்றினாள்.

**2. இலக்குமி தேவி:**

சகல செல்வங்களையும் வழங்கும் தேவி மகாலட்சுமிதேவியென அழைக்கப்படுபவள். இலக்குமி மங்களங்களை அளிப்பவளும், கற்பிற் சிறந்தோரின் அன்பிலும், மலர்ச்சோலையிலும் வாழ்பவளும், விஷ்ணுவின் மனைவியும் ஆவாள். தீபங்களிலும், சுடர்விட்டுப் பிரகாசிக்கும் திருவிளக்குகளிலும் வாசம்செய்கின்றாள். ஆலயங்களிலே விளக்கேந்தி நிற்கும் பாவை விளக்கிலும், தீபங்களிலும் தீபலட்சுமியாகப் பிரகாசிக்கின்றாள். இதனால் **இலட்சுமி வாசம் செய்யும் விளக்குகளைப் பரிவோடு ஒரு பூவினால் அணைக்கவேண்டும். ஊதியோ, கையால் விசிறிபோல் வீசியோ அணைத்தல் முறையற்றதாகும்.** இலட்சுமிதேவி தனலட்சுமி, தானிய லட்சுமி, வீரலட்சுமி, விஜயலட்சுமி முதலான அஷ்ட லட்சுமியாக இருக்கிறாள்.

இலட்சுமி தேவியிலிருந்து துளசிதேவி தோன்றினாள்.

**3. சரசுவதி தேவி:**

வெள்ளைத் தாமரையில், வெண்ணிற ஆடை அணிந்து, வீணை ஏந்திக் கல்விச் செல்வத்துக்கும் கலைச் செல்வத்துக்கும் அதிபதியானவள் சரசுவதிதேவி. சிவாலயங்களிலே வாயுபாகத்தில் வீற்றிருப்பாள் கலைமகள். வாகீஸ்வரி, பாரதி, அம்பிகாதேவி, சகலகலாவல்லி வாணி, வித்யாதேவி யாவும் இவளின் நாமங்களே!

காளமேகப் புலவர் சரியாசனம் பெற்றார். அப்போது யாவரும் விரும்பி மகிழும்

**'வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு**
**வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை**
**அரியா சனத்தில் அரசரோ டென்னைச்**
**சரியா சனம்வைத்த தாய்'**

என்று பாடினார்.

இரட்டைப் புலவர்கள், கம்பர், அம்பிகாபதி, ஒட்டக்கூத்தர், குமரகுருபரர் யாவரும் சரசுவதியின் கடாட்சம் பெற்றவர்கள். சரசுவதிதேவியிலிருந்து மானஸாதேவி தோன்றினாள்.

**4. காளி:**

'காலா' - காலம் என்ற கருத்தைக் குறிக்கும் வடமொழி வார்த்தையிலிருந்து வந்தது. காலனின் - ஈசனின் துணைவிதான் காளி. இதனால், காலவுருத்திரனுடைய சத்தி எனக்கூறுவர்.

முப்பது விதமான தோற்றங்கள் கொண்டவள், நிறமோ கறுப்பு - கறுப்பிலே சகலவிதமான நிறங்களும் அடக்கம். வலது கைகள் அபயகரமாகவும் (பயப்படாதே) வரதகரமாகவும் (ஆசீர்வதித்தல்) இருக்கும். இடது கைகளில் வாள், சூலம் கபாலம் என்பவை இருக்கும்.

காளி என்றவுடன் கொடூரமான கோபமான உருவமே எமக்குத் தோன்றும். ஆனால் ஆணவ மலத்தை அடக்கி, பாவ வலைகளிலிருந்து மீட்டு, தஞ்சம் கொடுக்கும் வரத முத்திரை கொடுமையை அழித்து நன்மையையே அளிக்கும். குலதெய்மாய், வழிகாட்டியாய், காப்பவளாய் வழிபடும் தெய்வமாய் எங்கும் எப்பொழுதும் இருப்பவளே காளி.

ஆடு மேய்க்கும் சிறுவனைச் சூலத்தால் பிரணவ மந்திரத்தை எழுதி மகாகவி காளிதாசன் ஆக்கியவள் காளியே. மடப்பள்ளியிலே சமையல் செய்தவன்மீது எச்சில் உமிழ்ந்து காளமேகம் ஆக்கிவிட்டவளும் காளியே. பாரதியார் காளியின் பரம பத்தர். காளியைக் கண்டு பேரானந்தம் பெற்ற இராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் அவள் அருள் பெற்றவர்கள்.

**நவராத்திரி**

சத்தி வழிபாட்டின் தொன்மைக்கு நவராத்திரி ஓர் உதாரணமாகும்.

**கன்னித் திங்கள் வருகிற தம்மா கருத்துடன் நவராத் திரிக்கு**
**கன்னிகை அம்மன் பூசைகள் செய்யக் காசுபணம் வேண்டும்**
**பொன்னினைப் போல நிறமுள கனியும் பூமடை காய்மடையும்**
**புனிதாய் அப்பம் இளநீர் புட்பம் புனுகுசவ் வாதுடனே**
**வன்னப் பள்ளியிற் படிக்கும் பிள்ளைகள் மாதா மனைதோறும்**
**வாங்கும் பணங்கள் அரிசிகள் கொண்டு வந்திடு பூசைக்கு**

**அன்னப் பரிமள குங்குமம் மகிழ்கமழ் அழகிய மெய்யாளே!**
**அம்பிகை கச்சிக் காமகோட் டத்துறை அபிரா மித்தாயே!**

இந்தப் பாடல் நவராத்திரி இருக்கும்வரை பசுமையாக இறக்காமல் இருக்கும்.

கன்னித் திங்கள் - புரட்டாதி மாதத்திற்குப் பெயர். கன்னி மாதம் என்பது புரட்டாதி மாதம். கன்னி இராசியிலே சூரியன் பிரவேசிப்பதால் அது கன்னிமாதம் என்றாயிற்று.

சிவனுக்கு ஓர் இராத்திரி சிவராத்திரி. சத்திக்கு ஒன்பது இரவுகள் - நவராத்திரி. இந்த ஒன்பது நாள்களில் முதல் மூன்று நாள்கள் துர்க்காதேவியையும் (வீரத்துக்கும்) அடுத்த மூன்று நாள்கள் இலட்சுமிதேவியையும் (செல்வத்துக்கும்) நிறைவு மூன்று நாள்களும் சரசுவதி தேவியையும் (கல்விக்கும்) வழிபடுவர். கன்னிமாதத்தில் வரும் அமாவாசையின் பின்னர் வருகின்ற பிரதமையில் நவராத்திரி தொடங்கும். தாமச குணம், ரஜ குணம் இரண்டையும் நீக்கிச் சாத்விக குணத்தை அடையும் வழியே நவராத்திரி.

பத்தாவது நாள் விஜயதமி அல்லது வெற்றித் திருநாள் எனப்படும். சத்தி மகிடாசுரனை அழித்த நாள். மகிடம் என்பது தாமச குணம். இதை நீக்கி, சாத்விக குணத்தை கொடுத்த நாள். இளஞ் சிறாருக்கு ஏடு தொடக்கும் வித்தியாரம்ப நன்னாள். இலங்கையில் விஜயதசமி நாளை 'மானம்பூ' விழாவாகக் கொண்டாடுவர்.

மும்பையில் தங்கியிருந்த விடுதிக்கு அருகில் மேளதாளத்தோடு பலர் சேர்ந்து ஒன்றாகப் பாடும் பாடல் கேட்டது. நாம் இதுபற்றி வினவ, 'நவராத்திரி தினம்' கொண்டாடுகிறார்கள் என்று விடை கிடைத்தது. நாங்கள், இங்கு எப்படி நவராத்திரியைக் கொண்டாடுகிறார்கள் என்று காணும் ஆவல் உந்த, சென்றோம். தெருவின் ஓரமாக அகன்ற கரையில் சிறு கூட்டத்தைக் கண்டோம். அவர்கள் சேரி வாசிகள். சொல்லாமலே ஏழ்மை தெரிந்தது. சிங்கத்தின் மீது எட்டுக் கைகள் கொண்ட அம்பாள் வீற்றிருந்தாள். காந்திக்குல்லா அணிந்த மெலிந்த எலும்புகளை எண்ணக்கூடிய ஒருவர் அம்பாள் பாடல்களைப் பாட, மற்றோர் பின்னர் சேர்ந்து பாடினர். சிலர் கையில் லோலக், (டோலக் போன்ற சலங்கை கொண்ட கைமேளத்தை) வாசிக்க, மற்றோர் அதற்கேற்பக் கைதட்ட, யாவரும் பரிவாகப் பாடினர். பின்னர் ஆரத்தி காட்டப்பட்டது. இது காட்டும்போது வேறுவிதமான இராகத்தில் பாடல் பாடினர். முதலில் ஆரத்தியைக் கொண்டுவந்து யாவரும் வணங்கும்படி செய்தனர். தீபம் இலட்சுமியல்லவா? பின்னர் விபூதி, குங்குமம் அதன் பின் பிரசாதம், வாழைப்பழங்களை மூன்றாக வெட்டி யாவருக்கும் ஒரு துண்டு கொடுத்தார்கள். எமக்கும் கிடைத்தது. வேறெங்கும் இப்படிக் காணவில்லை. இதன்பின்னர் மறுநாள் விழாவுக்காக காசு சேர்த்தனர். இவ்விழாவில் மிக ஈர்க்கப்பட்டு மெய்சிலிர்த்துப்போன நாங்கள் எம்மையறியாமலே சற்றுத் தாராளமாகவே உதவி செய்தோம்.

**சுந்தரி சௌந்தரி நிரந்தரியே சூலியெனும் உமையே குமரியே**
**அந்தமும் ஆதியும் இல்லா ஜோதியே அமலியெனும் மாயே**
**தவமணி நீயே**
**அருள்புரிவாயே**
**பைரவி தாயே**
**உன்பாதம் சரணமே!**

பனை மரங்கள் பரவலாகக் காணப்படும் கம்போடியா நாடு, தென்கிழக்கு ஆசியாவில், மேற்கே தாய்லாந்துக்கும், கிழக்கே வியட்நாமுக்கும், வடக்கே லாஓவுசுக்கும், தெற்கே தென்சீனக் கடலுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். முன்னொரு காலத்தில் இம்மூன்று நாடுகளின் நிலப்பரப்பைக்கொண்ட பெரிய கம்போடிய இராய்ச்சியம் ஆகத் திகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். கம்போடியாவை ஆண்ட இந்துமன்னர்கள் பல இந்து ஆலயங்களைக் கட்டியதுடன் உலகத்திலே மிகப்பெரிய இந்து ஆலயங்களை அமைத்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், தற்போது இந்து சமய வழிபாட்டுக்குரிய ஒரு இந்துக்கோயிலும் இல்லை என்றும் அவை வெறும் காட்சிப்பொருள்களாக அமைந்துள்ளன என்றும் அறிந்த எனது ஆதங்கத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

# கம்போடியாவில் காட்சிப் பொருள்களாக அமைந்திருக்கும் இந்து ஆலயங்கள்

த. செல்வரத்தினம்



அண்மையில், கம்போடியா நாட்டுக்குச் சென்றபோது நான் கண்ட ஓரிரு காட்சியை எனது கட்டுரைக்கு எடுத்துக்காட்டாகப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். பிரமாண்டமான பிரமதேவனின் நான் முகங்களைக் கொண்ட கோபுரங்களை உடைய கோயில்கள் பல சிதைவுற்றுக் காட்டு மரங்களாற் சூழப்பட்டுள்ளன. கோயிற்சுவர்கள் பல மரங்களின் வேர்களால் ஆக்கிரமிக் கப்பட்டுள்ளன. கோயிற் சுவர்களில் இருந்த சிற்பங்கள் சிதைக்கப்பட்டுள்ளன. பல சிற்பங்கள் திருடப்பட்டுள்ளன என்றும் அறிகின்றேன். பல சிவன்கோயில்களில் இருந்த இலிங்கங்கள் களவாடப்பட்டதோடல்லாமல் அதே இடத்தில் புத்தர் சிலை வைத்து வழிபாடு நடைபெறுவதையும் அவதானிக்ககூடியதாக இருந்தது. அத்துடன் பாற்கடலிலே தேவர்களும் அசுரர்களும் வாசுகி என்னும் நாகத்தினைக் கொண்டு பால் கடையும் காட்சி பெரும்பாலான கோயில்களின் முகப்பைச் சிற்பரூபத்தில் அலங்கரித்துக் கொண்டு இருக்கின்றது. இது இந்து சமயத்தில் பண்டைய கம்போடியா மன்னர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வலுப்படுத்துகிறது.

15ஆம் நூற்றாண்டு வரை கோலோச்சிவந்த இந்துசமய கம்போடிய இராய்ச்சியத்தின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக போரின் நிமித்தம் மக்கள் நடமாட்டமின்றி இடம் பெயர்ந்ததும், பௌத்த சமயத்தின் வளர்ச்சியும் காரணமாயிருக்கலாம் என்பதனை இலங்கையர் ஓரளவுக்கு ஊகிக்கக்கூடியதாக இருக்கும் என நினைக்கின்றேன். உதாரணமாக அண்மையில் இலங்கையில்

நடந்த யுத்தம் காரணமாக மாவிட்டபுரம் நிலப்பரப்பை விட்டு மக்கள் இடம் பெயர்ந்ததுடன் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் போன்ற கோயில்கள் சிங்கள இராணுவத்தினால் அழிக்கப்பட்ட நிலை 100 அல்லது 200 வருடங்களுக்கு நீடித்திருக்குமே ஆயின் அக்கோயில்கள் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை பண்ணிப்பாருங்கள்.



19ஆம் நூற்றாண்டில், அதாவது 1863இல் கம்போடியா பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்ட பின்னர், அந்நாட்டுக்கு உல்லாசப் பிரயாணி களாகச் சென்ற பிரெஞ்சு நாட்டவர்கள் அழிவடைந்து இருந்த இவ்வாலயங்களைப்பற்றி உலகத்தவர்கள் கவனத்தை ஈர்த்தார்கள். அதன் நிமித்தம் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் உல்லாசப் பிரயாணிகளும் கம்போடியாவுக்குப் படையெடுத்தார்கள்.

### ஆராய்ச்சி

தொல்பொருள் ஆய்வாளர்களின் ஆய்வுகளின்படி, கி பி 2ஆம் நூற்றாண்டில் கம்போடியாவில் கமுர் (Khmer) என்ற இனத்தவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களை, கமுர் மொழி பேசும் இந்துசமயத்தவர்கள் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். பெரும்பாலும் இந்தியர்களுக்கும் சீனர்களுக்கும் இடையே நடந்த வர்த்தகப் பரிமாற்றங்களின்போது, இந்தியர்களின் கலாசாரமும் இந்துசமயமும் அவர்களைக் கவர்ந்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. 8ஆம் நூற்றாண்டுவரை ஆண்டுவந்த கம்போடிய மன்னர்கள் இந்து சமயத்தவர்களாக, இந்துக் கோயில்கள் கட்டியிருந்தாலும் ஒரு நிலையான ஆட்சியை அமைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

2ஆம் ஜெயவர்மன் என்னும் இளவரசன் ஜாவா தேசத்திலிருந்து படை எடுத்து வந்து 790ஆம் ஆண்டு கம்போடிய ஆட்சியைக் கைப்பற்றினான். தனது ஆட்சியை நிலை நாட்டிய பின்னர், 802 இல் தான் ஒரு சக்கரவர்த்தி என்று பிரகடனம் செய்தான். இவன் ஒரு சிவபத்தன் என்றதால், குலன் (Kulan) என்ற மலைத்தொடரில் பரமேஸ்வரன் கோயில் அமைத்தான். மக்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான வாவிகளும் குளங்களும் கட்டினான். இம்மன்னன் காலத்தைக் கம்போடியாவின் அங்கர் (Angor) ஆட்சியின் ஆரம்பம் என்றும், கம்போடியாவின் பொற்காலம் என்றும் கூறுவர். இவன் காலத்துக் கட்டடங்களும் சிற்பங்களும் இந்தியாவிலுள்ள பல்லவரின் கட்டடத்திறனை ஒத்ததாக இருந்தவை எனலாம்.

பின்னர் ஆட்சிக்கு வந்த 2ஆம் ஜெயவர்மனின் மகனான 3ஆம் ஜெயவர்மன் ஒரு விஷ்ணு பத்தன் என்ற காரணத்தால், பேகொங் (Bakong) மலையில் விஷ்ணு கோயில் அமைத்தான். இவர்களைத் தொடர்ந்து ஆட்சிக்குவந்த இந்திரவர்மன், யசோவர்மன், ஹர்சவர்மன், 2ஆம் இசனவர்மன், 4ஆம் ஜெயவர்மன், இராஜேந்திரவர்மன், 5ஆம் ஜெயவர்மன், உதயாதித்யவர்மன், ஜெயவீரவர்மன், 1ஆம் சூர்யவர்மன், 3ஆம் ஹார்சவர்மன், 6ஆம் ஜெயவர்மன், தர்மேந்திரவர்மன் போன்ற மன்னர்கள் சிவன்கோயில்களைக் கட்டியிருந்தார்கள். (கட்டுரையின் நீளம் கருதி, இக்கோயில்களின் விவரங்களை இங்கே குறிப்பிடவில்லை) பண்டைய கம்போடிய மன்னர்களின்

பெயர்கள் 'வர்மன்' என்று முடிவடையும் அழகிய தமிழ்ப்பெயர்களைக் கொண்டாலும் அவர்கள் தமிழர்கள் அல்லர் என்பது கசப்பான உண்மை. அத்துடன் இவர்கள் தொடர் சந்ததியினர் அல்லர் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



இக்கோயில்கள் எல்லாம் தற்போது கூரையின்றி, அழிவுற்ற நிலையில் உள்ள கட்டடங்களாகவே காட்சி அளிக்கின்றன. இங்கு முறையான சமய ஆராதனைகளோ, வழிபாடுகளோ நடைபெறுவதில்லை. இவை இலங்கையின் பொலநறுவையில் அல்லது எகிப்து நாட்டின் Luxer பகுதி யிலுள்ள புராதனக் கோயில்கள் போன்றவையாகும் என்று தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

*11*ஆம் நூற்றாண்டில், உதயாதித்யவர்மன் *(1050-1066)* என்னும் மன்னன் கம்போடியா நாட்டின் ஊடாகப் பாயும் மீகொங் (Mekong) ஆறு ஊற்றெடுக்கும் குலன் (Kulan) என்ற மலைத்தொடரில், ஆயிரத்துக்கு மேற்பட்ட இலிங்கங்களைப் பொழிந்துள்ளான். இவை இப்போதும் சுற்றுலாப் பிரயாணிகளைக் கவரும் காட்சியாகும். இது 'River of thousand Lingas' என்று அழைக்கப்படுகின்றது. இந்த இலிங்கங்களைப் பொழிந்ததின் அடிப்படை நோக்கம் என்னவென்றால், இலிங்கங்களுக்கு மேலே பாயும் இந்த நீரூற்று சிவபெருமானின் ஆசீர்வாதத்துடன் நாட்டுக்குச் செல்வத்தை அளிக்கும் என்று அந்த மன்னன் நம்பிக்கை கொண்ட தேயாகும். இது, கம்போடிய மக்கள் இலிங்க வழிபாட்டில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தார்கள் என்பதை உணர்த்துகின்றது. கம்போடியாவின் Siem Reap என்ற பகுதியில் உள்ள இந்த ஆலயங்களைப் பார்வையிடுவதற்கு ஆண்டு தோறும் பெருந்திரளான உல்லாசப்பிரயாணிகள் சென்று வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அங்கர் கோவில் (Angkor Wat)



*12*ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், 2ஆம் சூரியவர்மன் *(1113-1150)* என்னும் மன்னன் உலகத்தை அதிசயிக்கவைக்கும் Ankgor Wat என்னும் விஷ்ணு கோயிலைக் கட்டினார். ஒரு சதுரமைலுக்கு மேற்பட்ட நிலப்பரப்பைக் கொண்ட இக்கோயில் மற்றைய கோயில்களைப்போல அல்லாது மேற்குத் திசையைப் பிரதான வாயிலாகக் கொண்டது. பிரதான வாசலின் இருபுறமும் பெரிதான ஏழு தலைநாகம் படம்பிடித்து ஆடும் நிலையில், வாலுடன் நீண்டிருக்கின்றது. மேருமலையின் பிரதிபலிப்பாக, நடுவே மூன்று தட்டு கோபுரம் உள்ளது. நான்கு திசையிலும் கோபுரங்கள் அமைந்த இக்கோயில் வளாகத்தைச் சுற்றி, உலகம் நீரினால் சூழப்பட்டுள்ளதைப் பிரதிபலிப்பதைப் போன்று வாவி சூழ்துள்ளது. இக்கோயிலின்


பிரதான வாசலில் 10அடி உயரமான எட்டுக் கைகளுடைய விஷ்ணு சொரூபம் உள்ளது. இச்சொரூபத்திற்கு மாலையிட்டு, ஊதுவர்த்தி ஏற்றி மக்கள் வணங்குவார்கள். பொதுவாகக்கூறின் இக்கோயில் இந்தியாவிலுள்ள கோயில்களைப் போன்று கல்லினால் அமைக்கப்பட்ட கூரையைக் கொண்டதாக உள்ளது. இக்கோயிலின் உட்சுவர்களில், மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களும், பாற்கடலில் அமிர்தம் கடைந்த புராணக்கதை போன்ற சிற்பவேலைகளும் பொழியப்பட்டுள்ளமை உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்துள்ளது. 2ஆம் சூரியவர்மனின் முடிசூட்டுவைபமும் அழகுறப் பொழியப்பட்டுள்ளது. அத்துடன் இயமன் எருமைக் கடாவில் சென்று தனது கடமையைச் செய்யும் காட்சியும், இலங்காபுரியில் இராவணன் ஆட்சிபற்றி விளக்கமும் இருந்தது வியப்பாக இருந்தது. கோயிலின் வெளிச்சுவர்களில், ஆங்காங்கே கம்போடிய நாட்டின் கலாசாரத்தைப் பிரதிபலிப்பதான அப்சரா (Apsara) நாட்டியக்கலைஞர்களின் சிற்பங்கள் அழகு ஊட்டுவதாக அமைந்துள்ளன. இந்தச் சிற்பங்கள் இந்தியாவின் பரத நாட்டியத்தை ஒத்ததாக இருந்ததைக் கவனிக்க முடிந்தது. கோயில்வளாகத்தில், புத்தகசாலைக்கான இருகட்டடங்கள் பிரத்தியேகமாக அமைக்கப் பட்டுள்ளன. மேல் கோபுரத்தில் புத்தர் உருவம் உள்ளது. புத்த சமயத்தின் முக்கிய தினங்களில், புத்த பிக்குமார்கள் மட்டும் வழிபட முடியும் என்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இது, ஒரு நாட்டின் ஆட்சிமாற்றம் அந்நாட்டு மக்களின் மதமாற்றத்தை ஊக்கு விக்கலாம் என்பதை உணர்த்து கின்றது. இத்தகைய சூழ்நிலை இலங்கைத்தீவிலும் வெகுவிரைவில் வரலாம் என்று சொல்ல விரும்புகின்றேன். எனவே சைவத் திருக்கோயில் ஒன்றியமும் உலக இந்து அமைப்புக்களும் இந்துக் கோயில்கள் அழிவடைவதைப்பற்றி எச்சரிக்கையாக இருந்து ஆன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்



கம்போடியாவிலுள்ள இந்து ஆலயங்களின் கோபுரங்கள் தென்னிந்தியாவிலுள்ள கோபுரங்கள் போன்று உயர்ந்து அகன்றவையாகக் காணப்படவில்லை.. இவையாவும் விரிவடையாத தாமரைப்பூப் போன்று குவிந்து அழகாக இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தன. எனவே இக்கோயில்களின் கட்டட அமைப்பு, பெரும்பாலும் ஜாவா, இந்தோனேசியா போன்ற நாட்டுக் கட்டடத்திறனாக இருந்திருக்கலாம் என்று ஊகிக்கக்கூடியாதாக இருக்கின்றது இதற்கு எடுத்துக்காட்டாக, இந்தோனேசியாவில் உள்ள பரம்பானன் (Parampanan) கோயில் வெள்ளிடைமலையாகும்.

இக்கோயில்கள்பற்றி The Lost Hindu Empire of Cambodia என்று Dr Neria Hebber என்பவர் Google இல் விரிவாக எழுதியுள்ளார். இக்கட்டுரை எழுதுவதற்கு Micheal Freeman & Claude Jacques என்ற ஆய்வாளர்கள் எழுதிய Ancient Angkor என்ற புத்தகமும், Googleஇல் உள்ள வேறு ஆக்கங்களும் உதவியுள்ளன என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

Dancing with Siva என்ற நூலில், யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் சீடரும் அமெரிக்கருமான சற்குரு சிவாய சுப்பிரமணியசுவாமி அவர்கள் 1993ல் உலக சனத்தொகைக் கணிப்பின்படி 5.3 பில்லியன் (billion) சனத்தொகையில் 1 பில்லியன் இந்துக்களாக இருந்தார்கள் என்றும், அவற்றுள் 93 % ஆனோர் இந்தியர் என்றும் மிகுதி 60மில்லியன் இந்துக்கள் உலகெங்கும் பரவியிருக்கின்றார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். அதேவேளையில், கம்போடியாவில் இந்துக்கள் இல்லை என்று கூறாமற் கூறியுள்ளார். பொதுவாக இந்துக்கள் என்றால், இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகள்தான் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கும். ஆனால் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இந்துக்கள் ஏதோவிதத்தில் இந்துசமயத்தைக் கடைப்பிடிக்கின்றார்கள். அவர்களுடைய இடர்களை ஆராய்ந்து இந்து சகோதரத்துவத்தை (Hindu Brotherhood) நிலைநாட்ட வேண்டும் என வேண்டிக்கொள்ள விரும்புகின்றேன்.



**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

**கலசம்**
**KALASAM**
இலவச காலாண்டிதழ்

**கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?**

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர் :..........................................................

முகவரி :..........................................................

..........................................................

..........................................................

Donation:
£..................

Postage:
£..........Total £.........

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

smsukkalasam@gmail.com

Postage and admin : £20 (U.K/Europe) : £ 30 (Rest of the world) (இரு வருடங்களுக்கு)

# எம் சமையம் - எதிரது தழீஇய சிந்தனை

**முருகவே பரமநாதன்**

**எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
**அதிர வருவதோர் நோய் -குறள் 429**

வருமுன்னர் காப்பதே முன்னேற்பாடு. கழிந்ததற்கு இரங்கேல். சமையம் என்ற பயன்பாடு மாறி, சமயம் என்றாயிற்று. சமயம், மதம் இரண்டும் வழமையாகப் பயன்படுத்தும் சொற்கள். பக்குவப்படுத்துதல் சமையல். பெரியவர்கள் மதத்தினும் சமயத்தையே வழிமொழிகிறார்கள். ஒரு வாழ்க்கைநெறியே சைவசமயம். அப்பரடிகள் சமையம் என்ற சொல்லைக் கையாண்டிருக்கிறார். அவ்வழி யாமும் இயங்குகின்றோம்.

**சமையமே லாறு மாகித் தானொரு சயம்பு வாகி**
**இமையவர் பரவி ஏத்த இனிதினங் கிருந்த ஈசன்**
**கமையினை யுடைய ராகிக் கழலடி பரவு வார்க்கு**
**உமையொரு பாகர் போலும் ஒற்றியூ ருடைய கோவே**

**-அப்பர் 4:5:5**

(சயம்பு , சுயம்பு, தானாகவாதல்)

எம் சமையம் எது? என்ன? எம் சமையம் சைவம். இ:.து சிவத்தோடு சம்பந்தமானது. எனவே சைவம் ஆயிற்று. அவனுக்கு இன்னொரு திருநாமம் சங்கரன். சங்கரன் (சம்+கரன்) நலத்தைச் செய்பவன், சம்பு - ஆனந்தத்தை அளிப்பவன்; சிவன் - மங்கலமானவன். சிவனோடு தொடர்புடைய வாழ்க்கை நெறியே சைவம். இவ்வுண்மையைத் தாயுமானவர் வாக்கிற்காணலாம்.

**சங்கர சங்கர சம்பு - சிவ**
**சங்கர சங்கர சம்பு - சிவ**
**சங்கர சங்கர சம்பு**

ஆனந்தக்களிப்பு

**சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி**
**சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி**

நாவேந்தர் திருத்தாண்டகம்

ஆதிச்சைவ மரபுகளின் வழித்தோன்றல்கள் நாம். ஏனவே எம்மவர் பலருக்குத் தம் சமையம் எதுவென்று புரியவில்லை. அதுதான் ஏனெனத் தெரியவில்லை. தெய்வம் யாரென்றே தெரியாமற் தட்டுளுப்புப்படுகின்றனர். ஆகச் சமையம் தெரியாது; வழிபடு தெய்வம் தெரியாது என்றால், பெருநாளிலேயே கலப்படம். அவ்வையும் திருமூலரும் இனம் காட்டியது சிவனையே. சரி. இன்னொருபடி போனால், தெய்வங்களைப் பலவாக்கியதன் விளைவு, சினகரங்களும் பலவாயின. புதிய தெய்வங்களின் படையெடுப்பு தெய்வத்தை விழுங்கிவிட்டமை சொல்லாமலே புரியும். ஒவ்வொரு சமயத்துக்கும் சட்டங்கள், ஒழுகலாறுகள் உண்டு. சைவத்துக்கும் சட்டங்கள், தத்துவங்கள், சாத்திரங்கள், அதையண்டித் தோத்திரங்களும் நிறையவுள. இவற்றுடன் புராணங்களுமுள. இந்த உறுதியான கட்டுகோப்புடையவர்கள் சைவசமயிகள். அதுவும் நம்மவரைக் கவரவில்லை. நமக்குப் பைபிளைப்போல, குர்ஆனைப்போல. தம்மபதம்போல கையேடுகள் இல்லையெனக் குழம்புகிறவர்களும் இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகப் பார்ப்பின் நாம் கற்புநிலை தவறிய பரத்தையர்களானோம். நாம் கற்புடைய பெண்களாய் வாழவேண்டும். வாழ்ந்து காட்ட வேண்டும். இந்த நிலைதான் கற்பு. கற்புடைச் சிந்தை மாதர் கணவரையன்றி வேறு ஓர் இற்புறத்தவரை நாடார் என்பது தாயுமானவர் வாக்கு. கற்பென்று பேச வந்தால் அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது என்பது பாரதியார் வாக்கு. கற்புடைய பெண்களைப்

பத்தினியென்றார் இளங்கோவடிகள். எனவே நாம் ஒவ்வொருவரும் பத்தினிகளாய் வாழ்ந்தாற்றான் நம் வருங்காலச் சந்ததியை வழிப்படுத்தலாம்.

**கற்புநிலை யென்று சொல்ல வந்தார்இரு**
**கட்சிக்கும் அ∴து பொதுவினில் வைப்போம்**
**வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்**
**வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்**

\- பெண்கள் விடுதலைக்கும்மி

'ஒன்று பரம்பொருள். நாம் அதன் மக்கள்' எனப் பாடிய பாரதி ஆயிரம் தெய்வ வழிபாட்டையும் ஏற்க மறுத்தார்.

**ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி**
**அலையும் அறிவிலிகாள் - பல்**
**லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்**
**டாமெனல் கேளீரோ.**
**சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்**
**சுருதிகள் கேளீரோ? - பல**
**பித்தமதங்களி லேதடு மாறிப்**
**பெருமை யழிவீரோ?**

பாரதி பாடல்- அறிவே தெய்வம்

திருமூலருக்கு விஞ்சி எவருமே இத்தரணியில் இல்லை. அவர், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றார். 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' எனப் பட்டினத்தார் பாடினார். இவற்றை மறுதலித்துப் பரசமயங்கட்கு இடம் கொடுப்பவர்களாய் இயங்குவோரும் நம்மவரே. பரசமயகோளரி என விருது பெற்றவர்கள் நம் சம்பந்தரும் நம்தேய நாவலருமாம்.

சைவநெறியில் இருந்து மாறி, கிறித்துவர்களாவது சமைய மாற்றம் என்கிறோம். இதை ஆழமாக கண்ணோட்டமிடின் சைவசமயிகள் இந்துமதம் எனக் கூறுவதும் ஒருவகை (மத) சமய மாற்றமே. பரசமயத் தெய்வவழிபாடும் மதமாற்றம்தான். சிவவிப்ரர் இசுமாத்தராவதும் ஒரு மதமாற்றமே எனலாம். சைவப்பாதையைவிட்டு, மகான்களைத் தெய்வமாக வழிபாடியற்றுவதும் சமய மாறாட்டமே. ஈழமணித் திருநாட்டினர் சமயக்கோட்பாட்டிலே அசையாமல் இறுக்கமான பிடிப்பு உடையவராய் இருந்தனர். இன்று கொஞ்சம் சரியக்காண்கிறோம். காரணிகள் சிலபற்றி யோசிப்போம். பல ஆன்மிகச் செல்வர்களின் கோட்பாட்டிலே ஊறிப்போன நிலையும் இதற்குக் காரணி எனலாம். நம் சமூகத்தவர்கள் புதியதொன்றைக் கண்டால், அதிலே ஈடுபாடு கொண்டு சொந்தச் சமயத்தைத் துறப்பதும் ஒரு காரணி. ரஜனி சுவாமிகள், குரு மகராஜ், ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி, பிரம்மகுமாரி சமாஜம், சாய் பாபா,அம்மா பகவான், பங்காரு அடிகளார், சற்குரு வாசுதேவர் (ஜக்கி வாசுதேவா), ஹரே கிருஷ்ணா அமைப்பு ஆகியவற்றின் பத்தர்களாய் அமைந்தவர்களும் நம் சமயத்தவர்களே. இவர்களை வணங்குவது பற்றி நாமொன்றும் கூறவரவில்லை. அவர்களின் சிந்தனைகளை ஏற்போம். ஆனால் நம் தாய்ச் சமையத்தை விட்டு விலகுவதோ, குறை கூறுவதோ உசிதமன்று. எல்லாவற்றையும் உள்வாங்கி நல்ல ஆன்மிகச் செல்வர்களாய் வாழ முயல்வோமாக. நம் சமயம் பல சவால்களை எதிர்கொள்ளவேண்டிய கட்டத்தில் இருக்கிறது. என்றாலும் பல ஆயிர ஆண்டுகள் அலைவீச்சுகளைத் தாண்டி இன்றும் நிலவுகிறதென்றால் அதன் தொன்மையும், மேன்மையுமே காரணமாகும். இன்று வெளிநாடுகளில் வாழும் நம் சமுதாயம் இரு விடயங்களிலே குழப்பமடைந்துள்ளனர். ஒன்று சமையம், மற்றது மொழி. எனவே மொழியையும் சமையத்தையும் பாதுகாக்க எதிரது தழீஇய கருத்துக்கள் தேவைப்படுகின்றன. ஒரு இளஞ்சமுதாயம் இரண்டுமின்றி வாழ்கின்றது. இந்நிலை சுபசூசகமாகத் தெரியவில்லை. சிந்திப்போம்; செயலாற்றுவோம்.

**தொடர்ச்சி பக்கம் 20**

# சாக்கிய நாயனார்



"திருச்சங்கமங்கை" என்னும் பதியில் வேளாளர் குலத்திலே சாக்கிய நாயனார் என்னும் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மெய்ப்பொருளை நன்றாக ஆராய்ந்தவர். எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டவர். "பிறந்தும் இறந்தும் வரும் பிறவித் தொடர்நிலையில் மேன்மேலும் செல்லாமல் இப்பிறவியிலேயே அதனின்று நீங்குவேன்" என்ற கருத்துக் கொண்டவர். அதற்காக அவர். தம்மூரைவிட்டு, மதில்கள் சூழ்ந்த காஞ்சிபுரம் என்ற நகரினை அடைந்தார். அங்கு மெய்யறிறவு பெறுவதற்குரிய பல வழிவகைகளை நாடி, முதலாவதாக சாக்கியர்களை (பௌத்த மதத்தினரை) அடைந்து அவர்கள் கூறும் தருமவழியிலே நின்று பிறப்பையொழிக்கும் உறுதிப்பாட்டின் வழியை ஆராய்ந்தார். பௌத்த சமய நூல்களைப் படித்தார். பிறகு பௌத்த சமய முடிவையும் மற்றப் புறச்சமயங்களின் முடிவுகளையும் ஆராய்ந்து அவையெல்லாம் உண்மைப்பொருளினை உணர்த்துவன அல்ல என்பதை உணரந்து கொண்டார்.

சிவபெருமானின் திருவருள் கூடியதால் "அழிவில்லாத சிவநெறியே உண்மைப் பொருள்" எனப் பெறும் நல்லுணர்வைப் பெற்றார். அறிவிக்க அறியும் சித்தாகிய ஆன்மாக்களும், அவ்வான்மாக்களால் செய்யப்படும் புண்ணிய - பாவ கருமங்களும், அக்கருமங்களால் விளையும் சுகதுக்கங்களான பயன்களும், அப்பயன்களை அவ்வான்மாக்களுக்கு ஊட்டுகின்ற தானே அறியும் சித்தாகிய பதியும் ஆகப் பொருள் நான்காகும் என்று தெளிவுகொண்டார். இச்சிறப்பின் இயல்புநிலை சைவநெறியல்லாத ஏனைய சமய நெறிகளுக்கு இல்லையெனும் துணிவையும் சிவனெறியொன்றே உண்மை நெறி என்பதையும், தாம் முன்செய்த தவத்தின் திறத்தால் உளம் கொண்டு சித்தித்து, இறைவன் திருவருளால் உணர்ந்து அறிந்தார்.

"ஒருவன் எந்நிலையில் நின்றாலும், எக்கோலம் கொண்டாலும் சிவபெருமானின் திருவடிகளை மறவாதிருத்தல் ஒன்றே உறுதிப் பொருள்" என்று சாக்கிய நாயனார் கருதினார். அதனால் அவர் தம்முடைய பௌத்த கோலத்தை நீக்காமல் தூய சிவத்திடம் பேரன்பு கொண்டு, அன்பினால் சிவபெருமானை மறவாது நினைந்து சிறந்து விளங்கினார்.

சாக்கிய வேடங்கொண்ட இப்பெரியார், "அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கமானது, பிரமனாலும், திருமாலாலும் காணமுடியாத விசும்பையும் பாதாளத்தையும் அளாவும் அழல் தூணாகித் தோன்றிய வடிவமே ஆகும்" என்று தெளிந்தார். "நாள்தோறும் சிவலிங்கத்தைக் கண்டு வழிபட்ட பின்னரே உணவருந்த வேண்டும்" என்ற ஓர் உறுதியைக் கொண்டார்.

ஒருநாள், சாக்கிய வேடந்தாங்கி இப்பெரியார் ஒரு வெளியிடத்திலே சிவலிங்கம் ஒன்றைக் கண்டார். கண்டதும் மனதில் பெருமகிழ்வு கொண்டு சிவார்ச்சனை செய்ய வேண்டுமெனப் பதைபதைத்து, தாம் செய்யும் செயல் இன்னதென்னறியாமல் அருகில் கிடந்த ஒரு கல்லை எடுத்து, அதையே மலராகப் பாவித்து அச்சிவலிங்கத்தின் மேல் அருச்சிப்பதுபோல் அந்தக் கல்லை எறிந்தார். தம் குழந்தைகள் தம்மீதுள்ள அடங்காத அன்பினால் இகழ்வாகிய

வன்செயல்கள் புரிந்தாலும் பெற்றோர்கள் அச்செயல்களைக் கண்டு மகிழ்வார்கள். பெற்றவர்களுடைய மகிழ்ச்சியைக் கண்ட குழந்தைகளுக்கும் தங்கள் வன்செயல்களில் இன்பமே உண்டாகும். அதுபோன்றே, சாக்கியர் வேடப் பெரியாரின் கல்லெறி செய்கையைக் கண்டு சிவபெருமான் மகிழ்ச்சிதான் அடைந்தார்.

அடுத்த நாள், சாக்கிய வேடப் பெரியார், சிவலிங்கத்தைக் கண்டு அருச்சித்த பின்புதான் தான் உண்பது என்ற நியதிப்படி முந்திய நாளில் அன்பின் அருச்சனையாகச் சிவலிங்கத்தின் மேல் கல்லெறிந்ததைப் பற்றி நினைத்தார். "நேற்று எனக்கு இந்த எண்ணம் தோன்றும்படி செய்து, அதை நிகழ்வித்தது, சிவபெருமானின் திருவருளே ஆகும்" என்று துணிந்தார். அதுவே தாம் செய்யும் திருத்தொண்டாக மேற்கொண்டு, தினந்தோறும் சிவலிங்கத்தைக கண்டு கல்லெறிந்து வழிபட்டு வந்தார். ஆயினும், தாம் கொண்டிருந்த சாக்கிய வேடத்தை கலைக் காமலிருந்தார். அன்பு நெறியில் கற்களையெறிதலை அவர் நாள்தோறும் வழுவாமல் செய்து வந்ததால், அந்த மெய்த்தொண்டு சிவபெருமானுக்கு சிறந்த பூசையாயிற்று. சாக்கிய நாயனார் கல்லெறிந்த செயலும் அன்புச் செயலே என்று கருதினால், கண்ணப்பரது செருப்பபடியும் இறைவனது திரு முடியில் பொருந்தப்பெற்றதேயாகும்.

இவ்வாறு சாக்கிய நாயனார் சிவலிங்கத்தின்மீது கல்லெறியும் திருத்தோண்டு செய்துவரும் காலத்தில் ஒருநாள் சாக்கிய நாயனார் திருவருட்சோதனையினால், தமக்கு வழக்கமான வழிபாட்டை அயர்வு மிகுதியால் மறந்து, உணவு கொள்வதற்கு சென்றார். அப்போது, தமது திருத்தொண்டு நினைவுக்கு தோன்றியது. உடனே அவர், "இன்றைக்கு எம் பெருமானைக் கல்லெறிந்து வழிபட மறந்தேனே!" என்று நினைத்து உணவு உண்ணாமல் இருக்கை விட்டெழுந்து, பெருவிருப்பத்தோடு மிக விரைந்து சென்று சிவலிங்கத்தின் திருமுன்னே நின்றார். ஓரு கல்லை எடுத்துச் சிலிங்கப் பெருமான் மீது எறிந்தார். சிவபெருமான் அவரது அன்புக்கு எளியராய், உமாதேவியாருடன் மழவிடையின்மேல், ஆகாயத்தில் எழுந்தருளி காட்சி கொடுத்து அவரைச் சிவலோகத்திற்கு அழைத்துச் சென்றார்.

"வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்"

-சுந்தரர்

*18ஆம் பக்கத் தொடர்ச்சி....*

சமய வீழ்ச்சிக்கான காரணங்கள். ஒரு சமயதாபனம் நிலையில்லாமை, ஒற்றுமையின்மை. சமயப்பற்று, தெய்வ நம்பிக்கை ஆகியவை அருகிவருதல். சமயரீதியான சடங்குகள், சம்பிரதாயங்களில் மூடநம்பிக்கைகள், இனவேறுபாடு, சிறந்த வழிகாட்டிகள் இல்லாமை, மதத்தலைவர்கள் இன்மை, மக்களின் அலட்சியப் போக்கு, வைராக்கியமின்மை, மக்களுக்கு உடன் பயன் நிறைவேறவேண்டுமென்ற அபிலாசை, பொருளாதார இன ஏற்றத் தாழ்வுகள், சிறந்த உழைப்பாளிகள் இன்மை, ஆலயங்கள் பெருகிய அளவு சமய வளர்ச்சி இன்மை என்பன. உயர்ந்த கோபுரங்கள் இருந்தென்ன? தாழ்ந்த உள்ளங்கள் மலியக் காணலாம்.

## விருதும் விழாவும்

சைவ முன்னேற்றச் சங்க உறுப்பினரான **திரு ஐ தி சம்பந்தன்** அவர்கள் சென்ற ஜூன் மாதம் **ஆயிரம் பிறை கண்டவர்** ஆகிவிட்டார். பல்லாண்டு வாழ்கவென அவரைக் கலசம் வாழ்த்துகிறது.

**திரு க சிவகுருநாதபிள்ளை, திரு சி தம்பு** ஆகியோருக்குச் சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் **சமூகசீலர்** என்ற பட்டம் அளித்துக் கௌரவித்துள்ளது. இவர்கள் இருவரும் சைவ முன்னேற்றச் சங்க உறுப்பினர்கள். கலசம் அவர்கள் இருவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றது.

**சிவயோகம்** - (அறக்கட்டளை இலக்கம் 1050398)

**ஈழம் அனாதர் பதியிலர் கதியிலர் நிதியம்**

அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் திருக்கோயில் Tel. 0208 767 9881, அருள்மிகு இலண்டன் நடராஜர் திருக்கோயில் Tel. 0208 795 4258, www. sivayogam.org.

## Donations made by Sivayogam for Charitable Purposes mainly in Sri Lanka, since 1999

| | Donated To | 1999/2000 | 00/01 | 01/02 | 02/03 | 03/04 | 04/05 | 05/06 | 06/07 | 07/08 | 08/09 | 09/10 | 10/11 | 11/12 | 12/13 | 13/14 | 14/15 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Sencholai | | 2,500 | 4,000 | | 6,000 | 12,512 | 12,100 | 5,000 | | | | | | | | | 42,112 |
| 2 | Kantharoopan Arivucholai | | | | | | 11,100 | 12,100 | 5,000 | | | | | | | | | 28,200 |
| 3 | Annai Illam - London Sivayogam Girls Home - Uppukulam, Mannar | | | 3,063 | 5,625 | 11,325 | 12,566 | 15,225 | 15,050 | 6,250 | | 8,153 | 13,100 | 15,750 | 13,876 | 12,725 | 9,250 | 141,968 |
| 4 | Hindu Board of Education - Jaffna | | | 2,015 | 5,700 | 8,200 | 11,110 | 10,950 | 11,100 | 2,700 | | 13,803 | 11,150 | 12,650 | 12,400 | 7,900 | 4,480 | 114,158 |
| 5 | Sivayogam Girls Home - Batticaloa ( Including Building) | | | | 1,500 | 3,700 | 3,706 | 4,400 | 3,650 | | | 11,383 | 18,455 | 10,786 | 8,614 | 6,800 | 5,700 | 78,694 |
| 8 | Sivayoga Samajam - Trincomalee | | | | | | 12,507 | | | | | | 1,005 | 2,150 | 2,850 | 2,250 | 1,800 | 22,562 |
| 6 | Gengatharanantha Memorial Hall - Sivayogam - Trincomalee | | | | | | | | | | | 25,003 | | | | | | 25,003 |
| 7 | Sivayogam Elders Home - Thiruketheswaram | | | | | | | | | | | | 6,572 | | | | | 6,572 |
| 9 | Fedration of Young Men's Hindu Association - Trincomalee | | | | | | | | 1,500 | | | | | | | | | 1,500 |
| 10 | Cancer Patients Welfare Fund | | | | 3,204 | | 3,000 | 1,500 | | | | | | | | | | 7,704 |
| 11 | Tsunami Disaster Relief | | | | | | 58,275 | 10,820 | | | | | | | | | | 69,095 |
| 12 | College of Higher Education Jaffna | | | | | 5,000 | 1,000 | 500 | | | | | | | | | | 6,500 |
| 13 | TRO - London | 1,000 | | | | | | | | | | | | | | | | 1,000 |
| 14 | Yogar Swamigal Thiruvadi Nilayam - Kilinochi | 800 | 2,000 | 1,842 | 517 | | | | | | | | | | | | | 5,159 |
| 15 | Vettrimanai Girls Uzhavazhathunai Nilayam - Kilinochi | 800 | 2,000 | 1,880 | 517 | | | | | | | | | | | | | 5,197 |
| 16 | Inniya Valvu Nilayam - Puthukudiirupu | 500 | 2,000 | 1,842 | 517 | | | | | | | | | | | | | 4,859 |
| 17 | All Tamil Fedration Association - Tamilnadu | 500 | | | | | | | | | | | | | | | | 500 |
| 18 | Durgapuram Girls Home - Thellipalai | 1,000 | 1,000 | | 1,000 | 1,000 | | | | | | 300 | | | | | | 4,300 |
| 19 | Fedration of Hindu Youth - Trincomalee | | 1,000 | | | | | | | | | | | | | | | 1,000 |
| 20 | Jaffna Gen. Hospital - Eye Operating Theatre building & equipements | | 10,000 | 400 | 5,797 | 500 | 1,000 | | | | | | | | | | | 17,697 |
| 21 | Holland Vinayakar Temple | | 6,000 | | 3,000 | | 824 | | | | | | | | | | | 9,824 |
| 22 | Mahadeva Ashramam - Kilinochi | | 1,000 | 2,702 | 1,286 | | 1,361 | | | | | | | | | | | 6,349 |
| 23 | Vibulanandar Orphan Home - Batticaloa | | 1,000 | | | | | | | | | | | | | | | 1,000 |
| 24 | Selva Sannathi Ashramam - Thondaimaanaru | | | | 1,000 | 1,000 | | | | | | 3,684 | | | | | | 5,684 |
| 25 | Selvasannathi Vinayakar Chariot | | | | | | 1,108 | | | | | | | | | | | 1,108 |
| 26 | Cost of Land for 5 Houses at Kantharodai ** | | | 3,000 | 2,308 | | | | | | | 290 | | | | | | 5,598 |
| 27 | Vinayakar Temple - Vavuniya | | | | 385 | | | | | | | | | | | | | 385 |
| 28 | Silver right twist Conch for Naguleswarar Temple - Keerimalai | | | | 769 | | | | | | | | | | | | | 769 |
| 29 | Silver right twist Conch for Thirukeetheeswaram - Mannar | | | | 769 | | | | | | | | | | | | | 769 |
| 30 | Silver right twist Conch for Durgai Amman Temple - Thellipalai | | | | 769 | | | | | | | | | | | | | 769 |
| 31 | Nallai Aatheenam | | | | 1,034 | | | | | | | | | | | | | 1,034 |
| 32 | Skandha Varodaya College | | | | 192 | | | | | | | | | | | | | 192 |
| 33 | Scoliswarar Temple- Kanthalai | | | | 357 | | | | | | | | | | | | | 357 |
| 34 | Thaum Seyum - Printing cost of Books | | | 500 | 724 | | | | | | | | | | | | | 1,224 |
| 35 | Nalvar Statutes to Saiva Muneetra Sangam - London | | | | 600 | | | | | | | | | | | | | 600 |
| 36 | Help to Individuals | | | | 1,000 | | 565 | | 1,200 | | | | 1,200 | | | | | 3,965 |
| 37 | Sivayogam Employment Resource Centre- Batticaloa | | | | 1,000 | 1,000 | 100 | | | | | | | | | | | 2,100 |
| 38 | Sivaboomi Mental Health Development School- Jaffna | | | | | 3,040 | | | | | | | | | | | | 3,040 |
| 39 | Medical Students - Jaffna University | | | | | 2,000 | | | | | | | | | | | | 2,000 |
| 40 | Vigneswarar Temple - Kolavil- Akkaraipattru | | | | 690 | | | | | | | | | | | | | 690 |
| 41 | Maruthadi Vairavar - Point Pedro | | | | | 500 | | | | | | | | | | | | 500 |
| 42 | Abirami Amman Temple - Karainagar | | | | | 650 | | | | | | | | | | | | 650 |
| 43 | Eye Hospital - Vavuniya | | | | | 1,550 | | | | | | | | | | | | 1,550 |
| 44 | Hendon Tamil School - London | | | | | | 500 | | | | | | | | | | | 500 |
| 45 | Lt.Col. Navam Academy - Kilinochi | | | | | | 5,263 | | | | | | | | | | | 5,263 |
| 46 | Tamil Information Technology Assosiation | | | | | | 500 | | | | | | | | | | | 500 |
| 47 | Dr Satchitanantham - Printing cost of Books | | | | | 1,363 | | | | | | | | | | | | 1,363 |
| 48 | English Academy, Mullaithevu | | | | | | 12,000 | | | | | | | | | | | 12,000 |
| 49 | Printing of Books- Witness to History - Mr S Sivanayagam Ayah | | | | | | 3,400 | 3,600 | | | | | | | | | | 7,000 |
| 50 | Maruthnamadam Kalaimagal Vidyalayam Land | | | | | | 7,052 | | | | | | | | | | | 7,052 |
| 51 | Flood relief - YMHA - Batticaloa | | | | | | | | | | | | 2,000 | | | | | 2,000 |
| | Exchange Commission | | | | | | | | | | | | | | | 120 | 96 | 216 |
| | | 4,600 | 28,500 | 21,242 | 40,262 | 46,828 | 159,449 | 71,195 | 42,500 | 8,950 | 0 | 62,616 | 53,482 | 41,336 | 37,740 | 29,795 | 21,326 | 669,821 |

* - Funds amounting to about £20,000 were organised to maintain the children from sources outside Sivayogam Account during 2007 to 2009, when Charity Commission stopped payments to Sri Lanka .
This amount is not included in the above account.

** - Cost of building the 5 houses sponsored by the Founder.


Thanalakshme Jewellers
தனலக்ஷ்மி ஜூவலர்ஸ்
வைர தாலிக்கொடி முதல்
மங்கையர் மனம் கவர்ந்த
தங்க நகைகளுக்கு
82 High Street
Barkingside
Essex IG6 2DJ
Tel: 020 8551 1153


Veena's
Quality! Variety!! Satisfaction!!!
CASH & CARRY
Veena's at BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com

VASTHRA DHANAM...

Enlightenment Circle

Saiva Munnetta Sangam

# Out Reach Projects - Sri Lanka – July'15

## Clothes to the Needy..

You may be aware that under post war conditions there is a real need for clothes for people living below the poverty line in the Vanni area.









This time Clothes were distributed to 54 people in Kunchu Kulam village in Vanni. Our storage facility (cloth bank) has enabled us to distribute cloths in an organised manner.

Special Projects News
email: smsukyoga@gmail.com or mobile: 07770 470527

Page 1











## ஆனி உத்தர அலங்கார உற்சவ கலை நிகழ்வுகள்

15.06.2015 – 24.06.2015



# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

Orchid Bungalow
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

Jasmine Bungalow
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592


Trinity Community Centre
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol com
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email goshinissinryukarate@gmail com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139


your choice is CLEAR!
invisalign
Come to Bluebell for..
INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION
Book your FREE consultation today!
Bluebell is an Invisalign® Platinum Elite Provider.
If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.
Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-invasive path of treatment she has become an Invisalign® Platinum Elite Dentist, a title which is only held by a privileged few dentists in the UK.
Bluebell
dental practice & clinic
Making a Difference
CHIGWELL
020 8500 6789
STRATFORD
020 8555 1144
www.bluebelldp.co.uk
YouTube

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஓகஸ்ட் (02-08-2015) தொடக்கம் அக்டோபர் (31-10-2015) வரை**

| | | |
|---|---|---|
| 11.08.2015 | செவ்வாய் | பிரதோஷம் |
| 13.08.2015 | வியாழன் | ஆடி அமாவாசை |
| 21.08.2015 | வெள்ளி | சைவ முன்னேற்றச் சங்கம் (ஐ.இ) ஆரம்பதினம் |
| 27.08.2015 | வியாழன் | பிரதோஷம் |
| 28.08.2015 | வெள்ளி | நடேசர் அபிஷேகம் |
| 10-09-2015 | வியாழன் | பிரதோஷம் |
| 25.09.2015 | வெள்ளி | பிரதோஷம் |
| 10.10.2015 | சனி | சனிப்பிரதோஷம் |
| 13.10.2015 | செவ்வாய் | நவராத்திரி ஆரம்பம் |
| 21.10.2015 | புதன் | சரசுவதி பூசை |
| 22.10.2015 | வியாழன் | விஜயதசமி |
| 25.10.2015 | ஞாயிறு | பிரதோஷம் |
| 10.11.2015 | செவ்வாய் | தீபாவளி |

**விசேஷ அறிவித்தல்: ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.**

**தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.**

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# யாரும் காணலாம்

எமக்கு முன் காணப்படும் உடல், உயிர்ச் சேர்க்கைகள் பல. உயிரற்ற பொருள்கள் பல. பழவகைகளைத்தரும் மரம், செடி, கொடிகள். நவதானியங்களை அள்ளி வழங்கும் நெல், புல் பூண்டு வகைகள். அமுதமான பாலைத்தரும் பசுக்கள், ஆடுகள், ஒட்டகங்கள். பெற்றதாய், தன் முலைப்பாலினூடாக எம்மை வளர்த்தாள். எனவே நாம் எம் தாய்மையின் ஊடாகப் பெறும் உணவு பால். உலக ஜீவராசிகளின் உடலில் இருந்து தத்தமது பிள்ளைகளுக்கு மனமுவந்து அன்பில் மலர்ந்து, கருணையின் நினைவாகப் பாய்ந்து ஓடிவருவது பால். இந்தப்பால் அகில உலகத் தாய்மையினால் எழும் ஒற்றுமை உணர்வைத்ததரும் தெய்வீக சின்னமாகும். அனைத்தும் பாற்கடல் மயமாக நாம் சிந்திக்கலாம். வாழ்க்கையின் ஆதார இருப்பிடம் அன்பின் மலர்ச்சி பாலாகி, இந்தப் பாற்கடலால் வேறுபட்டுத் தெரிந்த உலகம் மறைந்து தூய்மையான அன்பு உலகம் உதயமாகின்றது.

இறைவன் தாய்மையினூடாக அனைத்து உயிர்களுக்கும் உணவு அளிக்கின்றார். தாய்மையினூடாக அன்பு, கருணை, தியாகம், தயை, தாட்சண்யம் காட்டுகின்றார். எனவே தாயாக உடலை மறைத்து அகத்தே ஞானஒளி கொடுத்து, அனைத்து உயிர்களும் தன் உடன் பிறப்பாக நினைந்து வாழ உதவிய இறைவனின் அருட்செயலை நினைந்து நினைந்து ஆனந்தம் கொள்கின்றார் மாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகத்தில் -

**பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய**
**ஊனினை உருக்கிஉ உள்ளொளி பெருக்கிஉ உவப்பிலா ஆனந்தமாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே**
**யானுனைத்த தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்து தருளுவ தினியே**

எனவே நாம் பாலைத் தெய்வீக சின்னமாக வைத்து தியானம் செய்வோமாயின் "தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை" என்ற முடிவுக்கு வருவோம். இறைவனின் அருளை நாம் முதலில் எமது தாயிடமிருந்தே பெறுகின்றோம். அதுபோல சகல ஜீவராசிகளும் பெறுகின்றன. தாய்மை அருளின் இருப்பிடம். "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட பாற்கடல் ஈந்த பிரான்" இறைவனாகும்.

தேவர் முதல் மனிதர் வரை உள்ள பதினெண்வகைப் பிறப்புக்களுக்கும் பாற்கடல் பொது. பால் தயிராகி, தயிர் நெய்யாகி, பாற்கடல், தயிர்க்கடல். நெய்க்கடல் ஆகிய மூன்று கடல்களை நாம் தாய்மை என்ற தத்துவத்தினூடாகவும், சில மரங்களான தென்னை, சிறு பூண்டு ஆகிய எள்ளு, நிலக்கடலை முதலிய தாவரங்களிலும் காணலாம்.

சுவை தரும் பழங்கள் தாவரங்களின் அருட்பிரசாதமாகும். மா, பலா. வில்வம், வாழை, நாவல், ஆல் இவை அமிர்தகடலின் பிரவாகம். எனவே அமிர்தமான கனியூட்டும் பழம் தரும் மரங்களையும் நாம் தாய்மையின் சின்னமாகச் சிந்திக்கலாம். இப்படி மலர்கள், மலர்களின் தேன்துளிகள், தேனீ, தேன்கூடு அமுதமான தேன்கடலைத் தருகின்றன.

எனவே நாம் மரங்களையும் செடி கொடிகளையும் தனித்தனியாகவும் கூட்டாகவும் பார்க்கும்போது அமுதமான தேன் சுரந்து பாய்ந்து ஓடிவரும் தேன் நதியை சுமக்கும் மலைகளாக அவற்றை

பாவித்து, அந்த மலைகளில் நதிகள் பாய்ந்து ஓடிவந்து அமிர்தமான தேன் கடலை உருவாக்குகின்றன எனவும் எமது சிந்தனையை வளர்த்துக் கொள்ளலாம்.

இதேபோல், நெய்க்கடல், இப்படியே பால் சுரந்து ஓடிவரும் நதிகளைச் சுமக்கும் மலைகளான தாய்மையை உணர்த்தும். தாய், பசு, தேவமாதர்ககள், காமதேனு, கார்த்திகை நட்சத்திரங்கள் அனைத்திலும் பாற்கடல் தோன்றுவதையும் நாம் சிந்தித்து மகிழலாம். இப்படி எம்முன் காணப்பட்ட இந்த உலகம் பாற்கடல்மயமாக மாறுகின்றது.

உலகம் என்றோர் இடத்தில் இப்படி ஏழுவகை மலைகளில், ஏழுவகை முகிற்கூட்டங்கள் படிந்து, ஏழுவகை நதிகளாகி, பாய்ந்து ஓடிவந்து ஏழுவகைக் கடல்களாகி, ஒன்றுக்குள் ஒன்று கலந்து இந்த உடல் உயிர் வாழ்க்கையைத் தாங்குகின்றது.

இப்படி, பால், தயிர், நெய், தேன், அமிர்தம், நன்னீர், உப்புநீர், பழச்சாறு என நாம் பிரித்து, முகில்கள், மலைகள், நதிகள், வயல்கள், கடல்கள் என ஏழுவகைத் தியானம் செய்யும் பொழுது பயன்தரும் புற்கள், நெற்கள், பூண்டுகள், மரங்கள், செடிகொடிகள், பறவைகள், மிருகங்கள், மனிதர்கள், தேவர்கள் அனைத்தும் இயற்கைத் தன்மையால் தாய்மையாக மாறி தெய்வீகமாக நினைக்கச் செய்து எமது வணக்கத்தையும் நன்றிக்கடனையும் ஏற்கும் தெய்வத்தன்மையை பெறுகின்றன.

இதுபோல, எமக்கு ஒளி தரும் தீபங்கள், சூரியன், சந்திரன். நட்சத்திரங்களையும் சிந்திக்கலாம். இவையனைத்தும் தத்தமது உரிய கடலில் எரிந்து கொண்டிருக்கும் தீபங்களேயாம். கண்ணுக்குப் புலப்படாத ஒளிகளைத் தருவன. நவக்கிரகங்களும், அட்டதிக்குப் பாலகர்களும் ஏனைய கோள்களும் ஒவ்வொரு ஒளியாலும் ஒவ்வொரு காட்சியாக வருகின்றன. தீபங்கள் தரும் காட்சிகள் ஒருவகை, நட்சத்திர ஒளிகளின் காட்சிகள் ஒருவகை, சந்திர ஒளிக் காட்சிகள் ஒருவகை, சூரிய ஒளிக்காட்சிகள் ஒருவகை, அட்டதிக்கு தேவதைகளின் ஒளி ஒருவகை, நவக்கிரக ஒளிக் காட்சிகள் ஒருவகை, இவ்வாறு சேர்வையாகவும் தனியாகவும் அமைந்து எண்ணங்களை, கருத்துக்களைத் தோற்றுவிக்கும் ஒளிகள் பலவகை. இப்படி ஒளிகளினால் பலப் பல காட்சிகள் எம்முன் விரிகின்றன.

“நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த” என மாணிக்கவாசகசுவாமிகள் சிவபுராணத்தில் இந்த ஒளிகளைச் சுட்டிக்காட்டினார்.

சூரியன் நெய்க்கடலிலும், சந்திரன் பாற்கடலிலும், நவக்கிரகங்கள் தயிர்க்கடலிலும், கோள்களும், யாகதீபங்களும் தேன் அமிழ்ந்த பழச்சாற்றுக்கடலிலும், உயிர்களின் இதயத்துடிப்பு நன்னீர்க் கடலிலும் எரிந்து கொண்டிருக்கும் தீபங்களேயாம். இந்தத் தீபஒளிகள் எமக்குக் காட்சி களைகண்டு காட்டுகின்றன. இதனை உமாபதிசிவாசாரியார் திருவருட்பயனில் சுட்டிக் காட்டும்போது,

> **“எங்கும் எவையும் எரியுறுநீர் போலேகம்**
> **தங்குமவன் தானே தனி” என்றார்.**

எனவே ஏழுவகை உலகங்கள், ஏழுவகை மலைகள், ஏழுவகை முகில்கள், ஏழுவகை நதிகள் ஏழுவகைக் கடல்கள், ஏழுவகை தீபங்கள், பதினெட்டுவகைப் பிறப்புக்கள் என இந்தப் பிரபஞ்சகாட்சிகளை நாம் நம் தியானத்தில் இருத்தும்போது, அனைத்து அகபுற இயற்கைக்கும், மூல ஆதாரசக்தி ‘தாய்மை மயமானது’, தாய்மை வடிவானது என நாம் நேருக்கு நேரே

காணலாம்; உணரலாம். அந்தத்தாய்மையுடன் பக்தி, கர்மம், ஞான, யோகங்களினால் இணைத்து, சிறு குழந்தைபோல வாழ்ந்து மகிழலாம்.

இந்த தாய்மைத்துவத்தை “சர்வம் விஷ்ணு மயம்” என வேதங்கள் துணிந்து கூறும். “சர்வம் சக்தி மயம்” எனப் பக்தர்கள் ஆடிப்பாடி மகிழ்வர். தத்துவஞானிகள் இந்தச் சக்திமய பிரபஞ்சத்தில் தம்மை இழப்பர்.

எந்த சக்தி, தன்னை ஏழு வகையாகப் பிரித்து இந்தப் பிரபஞ்சத்தை இயக்குகின்றதோ அந்தச் சக்தியை நாம் தாய்மை வடிவத்தில் போற்றுவோம்; வணங்குவோம். எம்மைத் தாய் அன்பில் இருத்துமாறு வேண்டுகோள் செய்வோம். தாய்மையை நினைவுபடுத்தும் அத்தனை மரங்களையும், மிருகங்களையும், மனிதர்களையும், தேவர்களையும், தெய்வமென மதித்தும் பாதுகாத்தும் வளர்த்து எடுத்துப் பயன்பெறுவோம்.

எனவே நாம் நீராடும்போதும், இந்த மண்ணில் ஓடிவிளையாடி வேலைககள் செய்யும்போதும், உணவு அருந்தும்போதும், ஏன்? கட்டிலில் படுத்து உறங்கும்போதும், எம்மைப்பெற்று, எடுத்த தாயை நினைத்து, அந்த தாய்மையின் வடிவான தாவர சங்கமங்களை நினைத்து, அந்த தாய்மை வடிவான இறைவனை நினைத்து, எமது சாதாரண வாழ்க்கையை ஒரு தவவாழ்க் கையாக ஏன் மாற்றக்கூடாது? என நாம் ஆழந்து சிந்திக்க வேண்டும்.

எனவே எண்பத்து நான்கு நூறு ஆயிரம் யோனிபேதங்களில் வாழும் பதினெட்டுப் பிறப்புக்களையும் ஒன்றாக இணைக்கும் தாய்மை, இயற்கையில், ஏழுவகை உலகங்களையும், ஏழுவகைத் தீவுகளையும், ஏழுவகை மலைகளையும், ஏழுவகை நதிகளையும், ஏழுவகைக் கடல்களையும், ஏழுவகைத் தீபங்களையும் நேருக்குநேரே கண்டு அந்த உடல் உயிர் சேர்கை ஆகிய ஆலயத்திலே தனித்தனி ஜீவன்கள், தத்தமக்கு உரிய முலைகளினூடாக, உரிய பாலை அருந்தி, ஆனந்தங்கொள்ள, அதனை நேருக்குநேர் உணர்ந்து, அந்த முலைகளைத் தாங்கும், அக இயற்கைகளையும், புற இயற்கைகளையும், எவன் காண்கின்றானோ? அவனின் காட்சியே புனிதகாட்சி என திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஓர் தேவாரத்தில் தருகின்றார்.

**“உண்ணாமுலை உடையாளொடும் உடனாகிய ஒருவன்**
**பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ**
**மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவு அதிரும்**
**அண்ணாமலை தொழுவார்வினை வழுவா வண்ணம் அறுமே”**

எனவே தன்னைப்பெற்று எடுத்துத் தாலாட்டிச் சீராட்டி அன்புடன் வளர்த்த தாயை தியானைப் பொருளாக்கி படிப்படியே தியான சிந்தையை வளர்த்து உமாதேவியைத் தியானம் செய்ய வைத்து இறுதியில் சிவத்துடன் சேரும் நிலையைத் தருகின்றது. இது இயற்கை மலர்வு. எனவே “ தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை” என ஔவை மூதாட்டி பால்மணம் மாறாப் பருவத்தே எமக்குச் சொல்லி வைத்தார்.

**எனது அன்னை என்னைப்பெற்றதுபோல**
**உலக அன்னை உலகினைப்பெற்றாள்**
**எனது அன்னை எனை வளர்த்ததுபோல**
**உலக அன்னை உலகை வளர்க்கின்றாள்.**

**அகில உயிர்களும் உடன் பிறப்பாக**
**அன்பும் கருணையும் ஆனந்தம் பொங்க**
**தன் உயிர்போலப் பிற உயிர் பேணும்**
**ஆத்மீக சாதனை ஓர் அரும்பெறும் பேறாம்.**

இந்த அரும்பெரும் காட்சி அனைவருக்கும் கிட்டவேண்டும். கண் திறந்து நாம் இந்த உலகத்தைப் பார்க்கும்போது கண்ணால் பார்க்கக்கூடிய அத்தனை பொருள்களும் தாய்மையினால் தோன்றி நின்று நீங்குகின்றன என தாயுமான சுவாமிகள் இந்தச் சாதாரணக் காட்சியைத் தெய்வீகமாக்கி ஒரு பாடலை நமக்குத்தந்துள்ளார்.

**தெரிவாக ஊர்வன நடப்பன பறப்பன**
**செயல் கொண்டிருப்பன முதல்**
**தேகங்கொள் அத்தனையும்**
**மேகங்கொள் பௌதிகம்**
**ஜென்மித்த வாங்கு இறக்கும்**
**விரிவாய பூதங்கள் ஒன்றொடு ஒன்று அழியும்**
**மேல்கண்ட சேடம் இதுவே**

தியானத்தில் இன்னும் ஒருபடி மேலே செல்வோம்.

பிறந்த குழந்தை தானே தாயின் மடியில் பால் அருந்தும்.. ஆனால், அந்தக் குழந்தை கர்ப்பத்தில் இருக்கும்போது அதற்கு உணவு அளிப்பது யார்?

தாயின் வயிற்றில், தாயின் ஓர் அங்கமாக கர்ப்பத்தில் வாழ்ந்துவரும் குழந்தை எந்தவிதமான சுயமுயற்சியும் இன்றி, அனைத்து வசதிகளையும் பெறுகின்றது. தாயின் இரத்தமே குழந்தையின் இரத்தம். தாயின் பிராணனே குழந்தையின் பிராணன். தாயின் நினைவே குழந்தையின் நினைவு. இது ஓர் அதிசயமான வாழ்க்கை. எம்மால் பின்நோக்கியும் பார்கக்முடியாத ஓர் இருட்டு அறையாக இருக்கிறது.

இங்கு தாயும் குழந்தையும் ஒன்று. இரண்டு அல்ல என்ற அத்வைதபாவனை. இதேபோல் இயற்கையைத்தவிர வேறு ஒரு பொருள் இல்லை என்ற ஓர் தீர்மானித்த வாழ்க்கை எமக்கு அமைகின்றது.

பாருங்கள் தாயின் கர்ப்பத்தில், தாயோடு தாயாகச் சேர்ந்து வாழ்ந்து மண்ணில் பிறந்து குழந்தையாக வளர்ந்து வாழ்வதுபோல, சகல சீவராசிகளும் பிறந்து வளர்கின்றன. குழந்தை வளர்ந்து படிப்படியாக அறிவுபெற்று சூரிய ஒளியால் புற இயற்கையும் அக ஒளியால் அக இயற்கையும் பார்க்கின்றது. தனக்கு வேண்டிய உணவு, பாதுகாப்பு ஆகியனவற்றை தானே தேடிக்கொள்கின்றது. தாயின் கர்ப்பத்தில் ஒருவிதமான வாழ்க்கை, தாயின் மடியில் ஒருவிதமான வாழ்க்கை, சுயமாக மண்ணில் ஓடி விளையாடும்போது ஒருவிதமான வாழ்க்கை என ஒன்றுக்கொன்று வேறுபட்ட வாழ்க்கைகள்.

எனவே அருள் நிறைந்த காட்சிகளைப் பெறுவதற்குமுன் ஒருவிதமான வாழ்க்கை, அருள் நிறைந்த காட்சிகளைப் பெற்றபின் வேறுவிதமான வாழ்க்கை. முன்னையது இயற்கையோடு இசைந்த வாழ்க்கை. பின்னையது அருளோடு இசைந்த வாழ்வு.

எப்படியாயினும், தாயின் கர்ப்பத்தில் இருந்து வளர்ந்த குழந்தை மண்மீது பிறந்து, வளர்ந்து, தாய் முலைப்பால் அருந்தி, கல்வியிற் சிறந்து, பின் தான் வந்த வழியைப் பின்நோக்கிப் பார்க்கின்றது. தன்னை வளர்த்து எடுத்த தாயையும் அந்த தாயின் பற்பல சேவைகளையும் கண்டு நயந்து, எல்லா உடன் பிறப்புகளும், தாய்மையையும் சிறப்புடன் வாழ வாழ்த்துவதும், அவை சிறந்து வளர அன்பு, கருணை, தியாகத்துடன் உழைக்கும் ஊக்கம் நிறைந்த கடமையே சமய சாதனையாக மலர்கின்றது. ஒரு தனிமனிதனுக்கு மட்டும் இந்தச் சிந்தனை கிடைத்தால் போதாது, சமூகத்தில் உள்ள அனைவரும் இந்த தெய்வீக சிந்தனை நிலைக்கு உயர வேண்டும். அப்பொழுதுதான் கொடுமையும், வறுமையும், பிணியும், நோயும் நிறைந்த சமூகம், அருள் நிறைந்த சமூகமாக மாறும்.

இதனை ஏற்படுத்த, இந்து - சைவசமய ஆலயங்களில் கற்பிக்கப்படும் ஆரம்பப்பாடம் அபிஷேகமாகும். நீர், இளநீர், பால், தேன், பஞ்சாமிர்தம், விபூதி, குங்குமம் முதலிய அபிஷேகத் திரவியங்களினால் அபிஷேகம் செய்து, ஏழுவகை முகில்கள், ஏழுவகை மலைகள், ஏழுவகை நதிகள், ஏழுவகைக் கடல்கள் ஓர் இடத்திற் சங்கமிப்பதைக் காட்டி தாய்மையின் பெருமைகளையும் உலகத்தில் நாம் காணவேண்டிய அருள் உலக காட்சிகளையும் இதுதான் என அபிஷேக சாதனைமூலம் காட்டுவர். தாய்மையின் சிறப்புக்களை எடுத்துக்காட்டும் ஆலயங்கள் வீட்டிலும், தெருவிலும், மரத்தடிகளிலும், ஊரிலும், நகரிலும் காணும் இடம் எல்லாம் பரந்து விரிந்து காணப்படும். எனவே தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை. அகில உயிர்களுக்கும் அம்மை அப்பனாகத் திகழும் இறைவனையும், அவரின் குழந்தைகளாகிய அகில உயிர்களையும் அன்புடன் அணைத்துக் கருணை செய்யுங்கள் என்ற செய்திகளை பரப்பும் அபிஷேக சேவையில் ஈடுபட்டு உழைக்கும் அந்தணர்களை வாழ்க வாழ்க என்று வாழ்த்துவோம். அபிஷேக நன்னீரைத் தரும் கார்முகில்களை வாழ்க என வாழ்த்துவோம். இதமான அபிஷேகத் திரவியமாகிய பால் சுரந்து அளிக்கும் பசுக்களை, ஆ இனங்களை அன்புடன் வளர்ப்போம்; மேய்ப்போம். ஆவினம் வாழ்க என மனமார வாழ்த்துவோம். மழை வாழ்க என வாழ்த்தி நன்றியுடன் நாமும் சுகமாக, இன்பமாக வாழ்வோம்.

அக இயற்கையையும், புற இயற்கையையும் காவல் செய்யும் காவலர்களாகி வேந்தர்கள் வாழ்க! புவிராஜாக்கள் வாழ்க! இந்த உண்மைகளை அனைவருக்கும் எடுத்து ஓதும் நாவேந்தர்கள் வாழ்க! இவர்களின் முயற்சியால் இந்தப் பூமியில் காணப்படும் தீமைகள் அனைத்தும் நீங்குக. அனைத்திலும் தாய்மை உணர்ச்சி வெல்க! வளர்க! தாய்மையின் சிறப்புக்குணங்களாகி அன்பு, கருணை, தயை, தியாகம், அமைதி, ஆனந்தம், தீமையில் வெறுப்பு, நன்மையில் விருப்பு, அகப்புறத்தூய்மை இந்த உலகம் எல்லாம் பரவி, அனைத்து உயிர்களையும் ஒன்றாக, ஒன்றுடன் சேர்த்துக்கொள்க எனத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அனைத்தையும் வாழ்த்திக் காட்டுகின்றார் ஒரு தேவாரத்தில் -

> **"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
> **வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
> **ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே**
> **சூழ்க வையகமுந் துயர் தீர்கவே"**

ஆலய அபிஷேக தீர்த்த தரிசனத்தால் மட்டும், இந்த தெய்வீகக்காட்சி ஏற்படவேண்டும் என்ற அவசியம் இல்லை. நாம் நீராடும்போதும், இளநீர், பால், பழச்சாறுகள், தேநீர் பருகும்போதும், உணவு உட்கொள்ளும்போதும், தாய்மையின் நினைவுகள் தோன்ற, தெய்வீக அருட்காட்சி பெறலாம்.

நாம் அவசரம் அவசரமாக எதுவித சிந்தனையும் இல்லாமல், ஓர் இயந்திரம்போல ஒரு சூத்திரப்பாவைபோல இயங்குவதனால் தெய்வீக உணர்ச்சிகள் தோன்றுவதில்லை.

எனவே நாம் மண்ணில் நல்ல வண்ணமாக வாழவேண்டுமானால் எமது செயல்கள் அனைத்தையும் திறம்படச் சிந்தித்துத் திட்டமிட்டுச் செய்யவேண்டும். செய்கைகள் அனைத்தையும் தெய்வீகமாகச் சிந்தித்து மாற்றவேண்டும். நீராடும்போதும், உணவு அருந்தும்போதும், நித்திரைக்குப் போகும்போதும், நித்திரைவிட்டு எழும்பும்போதும் எமக்கு இத்தனை வசதிகளைத் செய்துதந்த சக்திகளுக்கு நன்றி செலுத்தவேண்டும். தாய்மையினூடாக தாய்மைக்கு ஆதார துணைவரான தந்தையை நினைத்து வாழ்தலே ஆத்மிக சாதனை என திருஞான சம்பந்தரமூர்த்திநாயனார் ஒரு தேவாரத்தில் தருகின்றார்.

**"மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை**
**கண்ணினல் ல∴துறும் கழுமல வளநகர்ப்**
**பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்தே"**

திருவள்ளுவநாயனார் இந்த உண்மைகளைப் பின்வரும் திருக்குறளில் சுட்டிக்காட்டுகின்றார்.-

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு".**

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு"**

இப்படி அகில உயிர்களுக்கும் தாய்மையினூடாக அநுக்கிரகம் புரியும் தில்லைப்பெருமான் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றார்.

**"பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்**
**மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்**
**ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாக**
**பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே"**

எனவே தாய்மையைத் தாங்கும் தாயையும், தந்தையையும் தம் உடன்பிறப்புக்களையும் யாரும் காணலாம். கண்ணின் பயனும் இதுவேயாம். காணப்படும் தந்தை, தாயை வழிபடும் பொருளாகக் கொண்டு அவர்களினூடாகத் தெய்வத்திற்கு வணக்கம் செய்யலாம் என்பதைத் தெரிந்துகொண்டோம்.

**நன்றி:**
**இறையியல் தத்துவமும் வழிபாடும் -மேழியூர் சைவப்புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு**

# திருமுறையிலே......

**ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்**
**சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்**
**பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்**
**போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி**

- பெரியபுராணம்

இந்தப் பெரியபுராணத் திருப்பாட்டிலே முதல் இரு அடிகளில் உள்ள முதற்சொற்கள் ஆதியாய், சோதியாய் என வருகின்றன. அடுத்த இரு அடிகளும் பேதியா, போதியா என்றே வருகின்றன. இதைத் தெரியாத பலர், ஓதும்போது பின் இரண்டு அடிகளையும் பேதியாய் என்றும் போதியாய் என்றும் ஓதிவருவதைக் கேட்க முடிகிறது. திருமுறைகளை ஓதும்போது சரியாக ஓதவேண்டும். இல்லையேற் பொருள் மாறிவிடும்.

இனி, இத்திருப்பாட்டின் பொருளை அறிவோம். ஆதி என்றால், தொடக்கம் என்று பொருள். உலகத்திலுள்ள உயிர்கள் தம் வினைகளுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை அநுபவிப்பதற்கான கருவிகளாக இறைவன் பொருள்களைப் படைத்துள்ளான். எனவே தோற்றுவிப்பவன் முதலானவன். அதனால் இறைவனை ஆதியாய் என்றார் சேக்கிழார். படைத்த உலகத்தை இறைவன் காப்பதால் நடுவுமாகி என்றார். ஆன்மாக்களால் அறிய, அளவிட முடியாதவன் என்பதனால் அளவிலா அளவுமாகி என்றார். ஒளி வடிவானவன் இறைவன் என்றதனால், சோதியாய் என்றார். ‘ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி’ என்றார் மணிவாசகர். ஆன்மாக்களுக்கு அறியுந்திறனைக் கொடுத்து அதன்மூலம் உணரவைப்பவன் என்பதால் உணர்வுமாகி என்றார். தான் தோற்றுவித்த பொருள்களாயும், அறிவுடைய, அறிவற்ற அனைத்துப் பொருள்களாயும் இருப்பதால் தோன்றிய பொருள் எனப் பாடினார் சேக்கிழார்.

பேதியா ஏகமாகி என்றால் அந்தப் படைக்கப்பட்ட பொருள்களுடன் ஒன்றாக நிற்கும் நிலையிலிருந்து பிரித்துக்காட்டமுடியாத நிலை. ஏகம் என்றால் ஒன்று. ஏகமாகி - ஒன்றாகி. பெண்ணுமாய் ஆணுமாகி என்றால் பெண்ணாகவும் இருக்கிறான், அதேவேளை ஆணாகவும் இருக்கிறான். இறைவன் எல்லாமாக இருப்பான்; இருக்கிறான்.

போதித்தல் என்றாற் கற்பித்தல் என்று பொருள். இறைவன் தன் குணங்களாலும் செயல்களாலும் உயிர்களுக்குக் கற்பிக்கிறான். சொல்லா நின்றான் என்றால் சொன்னான் என்று பொருள்படும். வாரா நின்றான், வந்தான். பேசா நின்றான், பேசினான். அதுபோலப் போதியா நிற்பவன் போதித்து நிற்பவன் என்று பொருள்கொள்ள வேண்டும். பொது என்றாற் சபை. நடம் என்றால் நடனம். தில்லையிலே உள்ள மன்றிலே நடனம் செய்பவனைப் போற்றுகிறேன்.

நமக்காக இவ்வுலகத்தைப் படைத்து அதைக் காத்து ஆன்மாக்களால் அளவிடமுடியாதவனாய், சோதியாய், நம்மை உணரவைப்பவனாய், தான் படைத்த பொருள்களின்றும் வேறுபடாதவனாய், ஒன்றாய், பெண்ணாய், ஆணாய், ஆன்மாக்களுக்கு அறிய உதவுபவனாய் இருந்து தில்லையிலுள்ள மன்றத்திலே என்றும் ஆனந்தத் தாண்டவம் செய்துகொண்டிருக்கும் இறைவனுக்கு வணக்கம்.

# இவர்களை என்னவென்று சொல்வது!

**-வைசி-**

நாங்கள், உள்நாட்டிலும் சரி, புலம்பெயர் நாடுகளிலும் சரி பெயருக்கும் புகழுக்கும் என்னென்னவெல்லாம் செய்கிறோம். நல்ல வழியில் உழைக்காமல் பல வழிகளிலும் பணம் பண்ணுகிறோம். நான் பெரிது, நீ பெரிது என்று சொல்லித் திரிகின்றோம். என்னால் ஆகாதது எதுவுமில்லை என்றும் சொல்கின்றோம். பொன்னைத் தேடி அலைந்து விதவிதமாக நகைகளை அணிகின்றோம். எம்மவர் எதுவுமின்றி ஏதிலிகளாய் திரிவதை அறிந்தும், தெரிந்தும் அவர்களுக்கு நாம் என்ன செய்கின்றோம்? உணவில்லாமல் உடையில்லாமல் எதுவுமற்றுத் திரியும் சிறார்களை நினைக்கின்றோமா? கட்டிய மனைவியிருக்க, அவளுடன் வாழாமல் வேறு சுகங்களையும் தேடுகின்றோம். ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாட்டையும் விட்டுவிட்டல்லவா பலர் அலைகிறார்கள். பெற்ற தாய், தகப்பன் அவர்களைக்கூட வைத்துப் பார்க்க முடியாமல் அவர்களை முதியயோர் இல்லங்களில் விட்டுவிடுகிறோம். உலகம் உய்ய, மனிதகுலம் வாழ நல் கருத்துக்களை வழங்கும் நல்ல ஆசான்களையும் மதிக்கிறோமா? இல்லையே! இவர்களை என்ன வென்று சொல்வது? இவர்களைப் புத்தியில்லா மூடர்கள் என்போமா?

**தன்னைத்தான் புகழ்வோரும் தன்குலமே பெரிதெனவே தான்சொல் வோரும்**
**பொன்னைத்தான் தேடியறம் புரியாம லவைகாத்துப் பொன்றி னோரும்**
**மின்னலைப்போல் மனையாளை வீட்டில்வைத்து மினுக்கிசுகம் விரும்பு வோரும்**
**அன்னைபிதா பாவலரைப் பகைக்கும் பேரு மறிவிலாக் கசடராமே**

விவேகசிந்தாமணி

இன்னுமொரு கவிதையைப்பார்ப்போம்

மலரின் மொட்டு வளைந்து நெளிந்து இருந்தாலும் அதன் வாசனை ஒருபோதும் குறையாது. கரும்பு கோணி வளைந்திருந்தாலும் அதன் பாகு(சக்கரை) இனிப்புக் குறைவதில்லை. இரும்பு நெளிவாக இருந்தாலும் அதன் அங்குசத்தால் யானையையும் அடக்கலாம். ஆனல் மனித உடம்பிலுள்ள எலும்புகளில் வளைவு கோணலாகிவிட்டால், அதுவும் முதுமையில், எதுவும் செய்யமுடியாது. முதமைப் பருவம் வந்தால், அதனால் பயன் இல்லையென்பதாகும்.

**அரும்பு கோணிடில் அதன் மணம் குன்றுமோ**
**கரும்பு கோணிடில் கட்டியம் பாகுமாம்**
**இரும்பு கோணிடில் யானையை வெல்லலாம்**
**நரம்பு கோணிடில் நாமதற்கு என்செய்வோம்**

விவேக சிந்தாமணி

Enlightenment Circle



**எல்லா வயதினருக்கும் யோகாசன வகுப்புக்கள் இங்கே நடைபெறுகின்றன.**

**Yoga lessons are held here for all age groups**

**Contact our team on : 07830 374780 / 07730 313379.**

# கண்ணனும் தாத்தாவும்



- முத்து -

அன்று ஞாயிற்றுக்கிழை, மாலை நேரம். இலண்டனிலே குளிர்காலம் ஆரம்பித்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக, வேளைக்கே சூரியன் மறைய ஆரம்பித்துவிட்டான். குளிரும் மிகையாக இருந்தது. இந்த நாள்களில், மாலை நேரத்தில் வீட்டுக்குள்ளேயே இருந்துகொண்டு, தொலைக்காட்சியில் (ரெலிவிஷனில்) நல்ல திரைப்படங்களையோ, அல்லது வேறு நல்ல நிகழ்ச்சிகளையோ பார்க்கத்தான் எல்லோரும் விரும்புவர். கண்ணனும் தாத்தாவும் ‘துணைவன்’ என்ற பத்திப்படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஐந்து மணியளவிற் படம் முடிவடைந்தது. இருவரின் கண்களிலும் கண்ணீர்த்துளிகள். கண்களைத் துடைத்துக்கொண்டே இருவரும் ஒருவரையொருவர் பார்த்தனர்.

கண்ணன்: தாத்தா! நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?

தாத்தா: கண்ணா! நான் அழவில்லை. ஆண்டவன் தன்னுடைய அன்பர்களுக்குக் கஷ்டம், துன்பம் வரும்போதெல்லாம் எப்படியெல்லாம் அருள்புரிகிறார் என்று எண்ணினேன், மனம் உருகியது, கண்ணீர் வந்தது. அதுசரி, உனக்கு ஏன் கண்ணீர் வந்தது? சொல் பார்க்கலாம்.

கண்ணன்: முருகன்மீது அளவுகடந்த பத்தியுடைய வேலாயுதம் என்பவருக்குக் கடவுள் கடைசியில் ஓர் ஊனமான குழந்தையைக் கொடுத்தார் என்பதைப் பார்த்ததும் எனக்கு அழுகைவந்தது தாத்தா.

தாத்தா: கண்ணா! வேலாயுதத்தின் மனைவிக்குக் கடவுள்மீது நம்பிக்கைவரச் செய்வதற்கே அப்படி ஒரு சோதனையைக் கடவுள் செய்தார். வைத்தியர்களாற் காப்பாற்றமுடியாத பிள்ளையைக் கடவுள் காப்பாற்றினார்.

கண்ணன்: ஆமாம் தாத்தா, அது உண்மைதான். அந்தப் பெண்ணுக்கும் கடவுள்மீது நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அதுசரி. ஆனால், முருகபத்தனான வேலாயுதத்துக்கு ஏன் துன்பம் வந்தது? கள்ளன் என்று குற்றஞ்சுமத்தி ஊரைவிட்டே துரத்தி விட்டார்களே!

தாத்தா: கடவுள் மனிதரைச் சோதிப்பது (துன்பங் கொடுப்பது) மனிதனுக்கு நல்லவழி காட்டத்தான். அப்படி ஒன்று நடக்காவிட்டால் அவன் தன் வாழ்க்கை முழுவதும் அந்தக் கோயிலிலேயே மணியடித்துக்கொண்டு இருந்திருப்பான்.

கண்ணன்: ஆமாம், தாத்தா. அவன் ஊரைவிட்டுப் போனதனாலேயே அவனுடைய வாழ்க்கையில் உயர்வடையக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

தாத்தா: நீ முதலிலே சொன்னதுபோல, 'ஏன் கடவுள் இப்படி எனக்குத் துன்பம் கொடுத்தார்? நான் அவரே கதியென்று இருந்தேனே! முருகனைக் கும்பிட்ட தற்குப் பலன் இதுதானோ?' என்று நம்பிக்கை இழந்து நின்றபோது, முருக பத்தரான திருமுருக கிருபானந்தவாரியார் என்ன சொன்னார் என்பது நினைவிருக்கிறதா? கண்ணா!

கண்ணன்: ஓ!, நினைவிருக்கிறதே, தாத்தா! 'முருகனை உள்ளம் உருகிக் கும்பிடும் பத்தர்களுக்குக் கேட்டது கிடைக்கும், நினைத்தது நடக்கும், இது சத்தியம்' என்று சொல்லுகிறார்.

தாத்தா: இன்னுமொன்று சொன்னார் கண்ணா! 'அப்படி நடக்காவிட்டால், நான் இந்த நெற்றியில் இருக்கும் திருநீற்றை அழித்துவிடுவேன்' என்றார். அதனால் அவன் மீண்டும் முருகனை வழிபடுகிறான். அவன் கேட்காமலே அவனுக்கு நிறைந்த செல்வத்தைக் கொடுக்கிறார் இறைவன்.

கண்ணன்: ஆமாம், தாத்தா! வேலாயுதம் எவருமே நம்பமுடியாத அளவுக்குப் பெருந் தொழிலதிபர் ஆகிவிடுகிறான்.

தாத்தா: அதனாலேதான் கிருபானந்தவாரியார், 'முருகன் அருள் வள்ளல். அடியார் வேண்டுவதையெல்லாம் அள்ளிக் கொடுப்பார்' என்று சொல்கிறார். முருகனின் அருட்பெருமையை அவர் நன்கு உணர்ந்தவரல்லவா?

கண்ணன்: ஆமாம் தாத்தா! அவர் சொன்னபடியே ஆண்டியாக இருந்த முருகபத்தனுக்கு முருகன் அருளால் எல்லாமே கிடைத்துக் கோடீசுவரன் ஆகிவிடுவதை இந்தப் படத்தில் காட்டுகிறார்கள். இப்படியான படங்களைப் பார்த்தால் எவருக்கும் பத்தியும் கடவுள் நம்பிக்கையும் வரும். இல்லையா தாத்தா?

தாத்தா: ஆமாம் கண்ணா! நான் சிறுவனாக இருந்தபோது எத்தனையோ பத்திப் படங்களைப் பார்த்திருக்கிறேன். அந்தப் படங்களில் வரும் பாடல்களைக் கேட்டாலே மனம் உருகும். பத்தியால் மனம் நிறையும்.

கண்ணன்: தாத்தா! தேவார, திருவாசகங்களை விட, பத்திப்பாடல்கள் புரிந்துகொள்ள மிகவும் இலகுவானவை.

தாத்தா: கெட்டிக்காரன்!, நீ சொல்வது முற்றிலும் உண்மை. தமிழை நன்றாகப் படித்தவர்களுக்கே தேவார, திருவாசகங்களின் பொருள் புரியும். அதுமட்டும் அல்லாமல், புராணக் கதைகளில் வரும் சம்பவங்களும் தேவாங்களில் இடம்பெற்றுள்ளன.

கண்ணன்: அப்போ, நல்ல தமிழறிவும், புராண இதிகாசங்கள் பற்றிய அறிவும் இருந்தால் மட்டுந்தான் தேவார, திருவாசகங்களின் பொருளைத் தெளிவாக அறிந்து உணரமுடியும் என்கிறீர்கள் தாத்தா. அப்படித்தானே?

தாத்தா: ஆமாம் கண்ணா! பல தேவாரங்களிலே புராணக் கதைகள் வருகின்றன. 'தோடுடைய செவியன்' என்று ஆரம்பிக்கும் திருஞானசம்பந்தர் முதன்முதலாகப் பாடிய தேவாரத்தில் 'ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து ஏத்த அருள் செய்த' என்ற வரியில் ஒரு புராணக்கதை வருகிறது கண்ணா!

கண்ணன்: அது என்ன கதை தாத்தா?

தாத்தா: முன்னொரு காலத்தில் படைத்தற் கடவுளாகிய பிரமனுக்கு, தான் பெரியவன் என்ற ஆணவம் வந்தது. அவரைச் சிவன் தண்டித்தார். அதனால், பிரம்மா பிரமபுரத்துக்கு வந்து சிவனை வழிபட்டார். இறைவனும் மனம் இரங்கி அருள்செய்தார்.

கண்ணன்: படைத்தற் கடவுளே இறைவனாற் தண்டிக்கப்பட்டாரா? நம்பவே முடியவில்லை தாத்தா!

தாத்தா: ஆணவம் கொண்ட எவருமே தண்டிக்கப்படுவார்கள்.

கண்ணன்: அப்போ, புராணக் கதைகள் எல்லாம் ஆணவம் கொண்டோர் எப்படித் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதைச் சொல்கின்றனவா தாத்தா?

தாத்தா: நம்முடைய முன்னோர்கள் சைவசமயத் தத்துவங்களையெல்லாம் கதை வடிவமாக எழுதித் தந்திருக்கிறார்கள். ஏனென்றால், கதை வடிவமாக சொன்னால்மட்டுமே அவற்றை மக்கள் சலிக்காமல் விரும்பிக் கேட்பார்கள், நினைவில் வைத்துக்கொள்வார்கள், புரிந்துகொள்வார்கள்.

கண்ணன்: ஓ! நம் முன்னோர்கள் மிகவும் புத்திசாலித்தனமாகவே வழிகாட்டிச் சென்றிருக்கிறார்கள். கந்தசஷ்டி விரதகாலத்தில் கோயிலில் கந்தபுராணம் படிப்பார்கள் என்று சொல்வீர்களே தாத்தா! அதிலே சொல்லப்பட்ட தத்துவங்கள் என்ன?

தாத்தா: கெட்டிக்காரன்! சரியான நேரத்தில் சரியான கேள்வி கேட்கிறாய். கந்தபுராணம் என்றாலே கந்தனைப் (முருகனைப்) பற்றிய கதையென்று எல்லோருக்கும் தெரியும். நீ இதைப்பற்றி என்ன தெரிந்துவைத்திருக்கிறாய்? சொல்பார்ப்போம்.

கண்ணன்: தேவர்களைக் கொடுமைப்படுத்திய சூரனை முருகன் அழித்துத் தேவர்களின் துன்பத்தைப் போக்குகிறார். சூரன் சிவபெருமானிடம் சாகாவரம் வாங்கியதால் மரமாகி நிற்கிறான். அப்படி நின்ற சூரனை, முருகன் தன் வேலாலே பிளக்கிறார். அந்த மரம் ஒருபாதி சேவலாகவும், மறுபாதி மயிலாகவும் மாறுகின்றது. முருகன் சேவலைக் கொடியாகவும், மயிலை வாகனமாகவும் ஏற்றுச் சூரனுக்கு அருள்செய்கிறார். இவ்வளவுந்தான் எனக்குத் தெரியும் தாத்தா. இதிலுள்ள தத்துவந்தான் என்ன? சொல்லுங்கோ!

தாத்தா: மனிதர்களிடம் நல்ல குணங்களும் இருக்கின்றன. தீயகுணங்களும் இருக்கின்றன. கந்தபுராணத்திற் கூறப்படும் சூரனும் அவனுடன் கூடிய அரக்கரும் மனிதரிடமுள்ள தீய குணங்கள். ஆணவம், ஆசை, கோபம், பொறாமை போன்றவை. எங்களிடமுள்ள நல்ல குணங்கள் நல்லவர்களாகிய

தேவர்களைக் குறிப்பிடுகின்றன. மனிதர்களிடம் எது சரி? எது பிழை? என்று அறியக்கூடிய பகுத்தறிவு இருக்கிறது. இந்தப் பகுத்தறிவையே முருகனாகக் காட்டப்படுகிறது. மனிதனிடமுள்ள தீய குணங்களை அழிப்பதற்குப் பகுத்தறிவை வளர்த்துக்கொள்வது அவசியம். இதற்கு, பத்தியை வளர்ப்பதற்கு முயற்சி செய்யவேண்டும்.

கண்ணன்: பத்தியை வளர்ப்பதற்கு முதற்படியாக இருப்பது கடவுள் வழிபாடுதான் என்று முன்பு எனக்குச் சொல்லித்தந்திருக்கிறீர்கள் தாத்தா!

தாத்தா: ஆமாம், காலையும் மாலையும் கடவுளை வணங்குதல் வேண்டும். தவறாது கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கவேண்டும். திருமுறைகளைப் படித்தல், சமயநூல்களைப் படித்தல், சமயப்பெரியார்களின் வரலாறு படித்தல், பெரியோரிடமிருந்து கேட்டறிதல், கேட்டறிந்தபடி வாழப்பழகுதல்...... சரிதானே கண்ணா!

கண்ணன்: பத்திப் படங்களைப் பார்ப்பதாலும் பத்திப் பாடல்களைக் கேட்பதாலும் பத்தி வருந்தானே தாத்தா?

தாத்தா: அட! நான் சொல்லத் தவறியதைச் சொல்லிவிட்டாய். பல புராணக் கதைகள் பத்திப் படங்களாக வெளிவந்துள்ளன. அவை ஓரளவு அறிவைத் தருமே தவிர முழுமையான பத்தி பெற அருள்பெற்ற அடியார்களின் திருப்பாடல்களே சிறந்தவை. பத்திப் பாடல்கள் நம்மைப்போல உள்ளவர்கள் பாடியவை. தேவார, திருவாசகத் திருமுறைகள் இறைவன் அருள்பெற்றவர்கள் பாடியவை.

கண்ணன்: புராணங்களைப் படிப்பதைவிட, படங்களிலே பார்க்கும்போது நன்றாக இரசிக்க முடியும். இல்லையா தாத்தா?

தாத்தா: ஆமாம் கண்ணா! சிலர் பத்திப் படங்களைத் தம்மை மறந்து இரசிக்கும்போது பட மாளிகை, திரைப்படம் என்பதெல்லாம் மறந்து எழும்பி நின்று கும்பிடத் தொடங்கிவிடுவார்கள்.

கண்ணன்: அப்படியா தாத்தா? மிகவும் வேடிக்கையாக இருக்கிறதே!

தாத்தா: வேடிக்கையாகத்தான் இருக்கும். ஆனால் அது அவர்களின் பத்தி மேம்பாட்டைக் காட்டுகிறது என்றும் சொல்லலாம்.

கண்ணன்: அப்போ, அடுத்த பள்ளி விடுமுறை வரும்போது இன்னும் நல்ல படங்களை எடுத்துப் பார்ப்போம் தாத்தா.

தாத்தா: அப்படியே செய்வோம். நேரமும் ஆறு மணியாகிறது. நான் சுவாமி கும்பிடப் போகிறேன்.

கண்ணன்: சரி தாத்தா, நானும் முகம் கழுவிவிட்டு உங்களுடன் சுவாமி கும்பிட வருகிறேன்.

**(கண்ணனும் தாத்தாவும் மாலை நேர வழிபாட்டுக்குத் தயாராகின்றனர்)**

# அரசனைப்போல் வாழுங்கள்!

அவனுக்குப் பணந்தான் முக்கியம். அது இருந்தாற் போதும். வேறு எதுவும் தேவையில்லை என நினைப்பவன். பணம் கையில் இருந்தால், ஆசைப்பட்டது எதுவாக இருந்தாலும் அதை வாங்கித் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளலாம் என்பது அவன் நம்பிக்கை. தன்னைவிட, தன்னிடம் இருக்கும் பணத்துக்கு அவன் அதிக மரியாதை கொடுத்தான். பணம்கொடுத்து வாங்குகிற பொருள் எதுவானாலும் அதன்மீது உயிரையே வைத்திருந்தான்.

ஒருநாள் அவன் தன் நண்பனைத் தேடிப்போனான். அந்த நண்பன் அப்போதுதான் புதிதாக ஒரு கார் வாங்கியிருந்தான். 'காரைக் கொஞ்சம் இரவலாகத் தரமுடியுமா?' என்று இவன் கேட்டான். அவனும் சாவியைக் கொடுத்தான். இவன் காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

ஒரு சாலையில் வேகமாகப் போய்க்கொண்டிருந்தபோது எதிரே வந்த இன்னொரு கார் இவன் காரை வேகமாக உரசிக்கொண்டு போய்விட்டது. அவ்வளவுதான். கார்க்கதவு துண்டாகி உரசிய காரோடு ஒட்டிக்கொண்டுபோய்விட்டது. இவன் கீழே குதித்தான். "ஐயோ.... போச்சே.... ஐயோ போச்சே" என்று கத்தினான். போக்குவரத்துக் காவலர் பதறியபடி ஓடிவந்தார்.
"அடப் பாவி! கதவு போச்சேனு கத்தறியே.... திரும்பிப்பார்.. உன் கையே போயிடுச்சு!"
இவன் திரும்பிப் பார்த்தான். தன் கையைக் காணவில்லை. மறுபடியும் கத்தினான்.
"ஐயோ.... போச்சே.... ஐயோ போச்சே"
காவலர் சொன்னார், "கவலைப்படாதே! வா, ஆஸ்பத்திரிக்குப் போகலாம்" இவன் மறுபடியும் கத்தினான்.
"நான் கை போனதுக்காகக் கத்தலை... அதுல கட்டியிருந்த புதுக் கைக்கடியாரம் பே-ாயிடுச்சே..."

இப்படிப்பட்ட ஆசாமிகளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? பணத்துக்காக உயிரையே கொடுக்கத் தயாராக இருப்பவர்கள் இவர்கள். இவர்களைப் பொறுத்தவரையில் உயிரின் விலையைவிடப் பணத்தின் விலை அதிகம். பண உணர்வு அந்த அளவுக்கு மனிதனின் மன உணர்வை மாற்றிவிடுகிறது.

அமைதியாக வாழ விரும்புகிறவர்கள் அதிகப்படியான ஆசையைக் குறைத்துக்கொள்ளவேண்டும். 'மன அமைதியும் பொருள்களிற் பேராசையும் ஒன்றுக்கொன்று முரணானவை' என்கிறார் சுவாமி சிவானந்தர். 'அவை இரண்டும் இணங்கிப் போவதில்லை. எனவே உங்களுக்கு எது தேவையோ அதைத் தேர்ந்தெடுங்கள்' என்பது அவர் கூறும் ஆலோசனை.

'உங்கள் பொதுவான புறவேலைகளுக்கேற்பத் தேவையானவற்றை மிக மிகக் குறைத்துக்கொள்ளுங்கள். ஆசைகளும் தேவைகளும் மிக மிகக் குறையும் அளவுக்கு மன அமைதி மிகவும் அதிகரிக்கும்' என்று அவர் சொல்கிறார்.
நண்பர்களே! நாம் கையிலே கட்டியிருக்கும் கடிகாரம் நமக்கு நிகழ்கால நேரத்தைக் காட்டிக்கொண்டிருக்கிற வரையில் பிரசினை இல்லை. அதுவே நம் எதிர்காலத்தை நிர்ணயிக்கிற அளவுக்கு அதன்மீது ஆசைகொள்வது அவசியமில்லை.

சுவாமி சிவானந்தர் சொல்வதைக் கவனியுங்கள். 'உங்கள் தேவைகளைப் பெருக்கிக்கொண்டு பிச்சைக்காரனைப்போல் திரியாதீர்கள்! உங்கள் தேவைகளைக் குறைத்துக்கொண்டு அரசனைப்போல வாழுங்கள்!'

**- தென்கச்சி சுவாமிநாதன்**


**நன்றி - சக்தி விகடன்**

# Hinduism in search of answers...

**Is Re-incarnation true?**


Reincarnation is a theory intended to logically explain the phenomenon of birth and death based on certain facts and observations using the Law of Causation (also called Law of Karma) and the Law of Conservation of Energy.

The law of causation states that every effect has a cause and every cause has an effect. The law governs the entire universe and it operates in both physical and mental levels. What you are today is as a result of what you have been doing in the past.





What you will be in future will depend upon what you do from today onwards. You are a product of your past, but the producer of your future.

**In complex systems, cause and effect are often distant in time and space**



The law of conservation of energy is a law of science that states that energy cannot be created or destroyed, but only changed from one form into another or transferred from one object to another.








**FIGURE 1–2**
Conservation of energy principle for the human body.

When a person dies, the gross body perishes in that form, but the material elements in the body do not perish. They become water, air and other constituents which are then absorbed by a plant or animal.

The subtle body of a person consists of his thoughts, emotions, desires, hopes and aspirations. These constitute his inner energy and the mental and intellectual force. According to the law of conservation of energy, we must conclude that this inner energy cannot end there at death. It cannot vanish into nothing.




When people are born, they are born with inherent tendencies, inclinations and capacities. Some children from the same family display diametrically opposed tendencies.






One likes Science; other likes Arts. One likes spirituality; Other likes sensuality.

**What determines these tendencies?**

These children's desires could not have come from nowhere. Something does not come out of nothing, according to the two laws stated above. These desires are the effect of a cause.




The cause, according to the theory of re-incarnation, is the collection of the unfulfilled desires of a person at the time of their death.

The resultant force of the inner energy of a person after his death, chooses a suitable place and parents to be born as children. Hence, everyone selects his or her own parents before their birth, according to their law of Karma.



Lord Krishna in the Bhagavat Geeta about Re-incarnation:


Just as the embodied soul passes through childhood, youth and old age, so does it similarly passes into another body at death. A wise person is not grieved by such change (2.13)

As a person puts on new garments, giving up old ones, the soul similarly accepts new material bodies, giving up the old and useless one. (2.22)

One who has taken his birth is sure to die and, after death one is sure to take re-birth again. Therefore you should not grieve over the inevitable. (2.27)

Oh our God !
Grass, herb, worm, tree, beasts a good many, bird, snake, stone, men, ghouls, bootha-host, cruel Asuras, Sages and Devas: I was born as all these fauna and flora, and am now utterly fatigued Lord!,
I have this day, beheld your golden feet and gained deliverance ! (Thiruvasagam 1)


**What is Moksha?**



The only way to stop this cycle of births and deaths is to achieve Moksha, which means liberation. This liberation is attained when there are no more desires. This means there will be no need for another birth. Thus, the chain of births and death can be broken.




Desireless state means being permanently Happy in the Knowledge of Truth (Sath Chith Anantham). All our Saints have shown various paths to achieve this goal. The Saiva Agamas show a fourfold path based on Bhakthi (devotion) to achieve this state. They are Sariyai, Kiriyai, Yoga and Gnanam.




The Gnana Paatham (or Gnana Yoga) is the final stage of this path. It is a path of knowledge which eliminates ignorance.

Ignorance (of what is truth and permanent) is the cause of all attachment (desires) and the consequent suffering. God is the only permanent Truth in nature. When one truly understands the nature of God, he becomes one with God. There will be no more accumulation of Karma, and the individual is not born again.




After many births and deaths, the man of wisdom surrenders unto me, knowing me to be the cause of all causes and all that is. Such great soul is very rare (Bhagavat Geeta 7.19)

The wise, having renounced and arisen above this world, become immortal. (Kenopanishad 1.2)

I was mixing closely with the intractable and stubborn ones Who knew not the way of Moksha.
He revealed to me the path of bhakti which I should pursue
He so snapped the malas inherent in my soul, that my old Karma stood uprooted,
And made me Siva-conscious and rules me.
Ah, who will come by the gracious way that I was blessed with, by Siva?

(Thiruvasagam – 51.1)

***Edited by: S Atputhananthan***

## வாழ்க்கையின் அர்த்தம்

வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்காக ஒருவர் கபீர்தாசரிடம் வந்தார். அப்போது, கபீர்தாசர் தன் கையிலிருந்த நூல் உருண்டையின் சிக்கலை எடுத்துக்கொண்டிருந்தார்.வந்தவர், கபீர்தாசரிடம் வாழ்க்கையின் அர்த்தத்தைக் கூறும்படி வேண்டினார்.

உடனே கபீர்தாசர் அவரை அமரச்சொல்லிவிட்டு, உள்ளேயிருந்த தம் மனைவியிடம் ஒரு கைவிளக்கை ஏற்றி எடுத்துவருமாறு கூறினார். அவர் மனைவியும் அவ்வாறே செய்துவிட்டு உள்ளே சென்றார். சிறிது நேரம் சென்றபின் வந்துள்ளவருக்கு ஏதேனும் குடிப்பதற்குத் தருமாறு மனைவியிடம் கூறினார்.

அவரும் இரண்டு டம்ளர் பால் கொண்டுவந்து கொடுத்தார். கபீர்தாசர் தனக்களித்த பாலை மட மடவென்று குடித்துவிட்டார். வந்தவரோ, ஒரு வாய் குடித்ததும் முகத்தைச் சுழித்துக்கொண்டு வெளியே போய்ப் பாலை உமிழ்ந்துவிட்டார். ‘எனக்குப் புரிந்துவிட்டது, எனக்குப் புரிந்துவிட்டது’ என்று கூறியபடியே அங்கிருந்து வெளி யேறினார். கபீர் அவரை அழைத்து, ‘என்ன புரிந்துவிட்டது உங்களுக்கு?’ என்றார்.

வந்தவர், “பகல் நேரத்தில் ‘கைவிளக்கு ஏற்றி வா’ என்று கணவன் கேட்டபோது, ஏனென்று கேட்காமற் கொண்டுவந்த மனைவியும் குடிக்கும் பாலில் சர்க்கரைக்குப் பதிலாக, மறதியில் உப்புப் போட்டுத் தந்தாலும் மறுப்பேதும் சொல்லாமல் மகிழ்வுடன் குடிக்கும் கணவரும் இருக்கும்போது வாழ்க்கை இனிக்கத்தானே செய்யும்! இப்போது வாழ்க்கை என்றால் என்ன என்று எனக்கு நன்றாகவே புரிந்துவிட்டது” என்றபடி வெளியேறினார்.

எம் வி குமார் - மதுராந்தகம் (நன்றி - சக்தி விகடன்)


லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை

*First Sri Lankan Jewellery shop in U.K.*



# WESTERN JEWELLERS

*Jewellers & Gem Merchants*

230,UPPER TOOTING ROAD
LONDON SW17 7EW
**PHONE : 020 8767 3445**

# SILK EMPORIUM

122 UPPER TOOTING ROAD LONDON SW17 7EN
**PHONE : 020 8672 1900**

# WESTERN
## JEWELLERS & TEXTILES



5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,
WEMBLEY, MIDDLESEX HA0 4YA.
**PHONE : 020 8903 0909**

**OPENING HOURS**
**Monday to Saturday**
**10.00am - 6.30pm**
**Sunday 11.00am - 5.30pm**

இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 02-08-2015 அன்று வெளியிடப்படுகிறது.